# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**நவம்பர் 2000 ஜீவியம் 6 மலர் 7**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 14 |
| லைப் டிவைன் | 15 |
| அன்பர் கடிதம் | 29 |
| சிறு குறிப்புகள் | 31 |
| சாவித்ரி | 33 |
| அஜெண்டா | 35 |
| இந்தியா அமெரிக்காவாகச் சீக்கிரம் மாறலாம் | 38 |
| லைப் டிவைன் - கருத்து | 46 |
| கனவில் கண்ட கண்கண்ட தெய்வம் | 48 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 60 |


❈ ❈ ❈

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருட சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**611) பெரிய மகான்களை அண்டியிருந்தவர்கள் தங்கள் குறைகளைப்பற்றி, "நான் பெரியவர் திருவடியிலிருந்தேன். ஒன்றிரண்டு கறுப்புப் புள்ளிகள் இருக்கலாம்," என்பார்கள். உண்மை வேறு. அருகிலிருப்பதால் மனிதன் மாறுவதில்லை. அதையே வேறு வகையாகச் சொல்லலாம், "பெரியவர் பாதத்திலேயே இருந்ததால், ஓரிரு துளி ஒளி உற்பத்தியாகியுள்ளது" எனலாம்.**

***சிறு துளியைப் பெரு வெள்ளமாக்குபவர்கள்.***

❊ ❊ ❊

அன்னையை நாடிவந்த சாதகர்கள், பக்தர் அனைவரும் பூர்வ ஜென்மங்களில் அன்னையுடனிருந்தவர்கள். உலகம் சுவர்க்கமாகும் பொழுது, நாங்களும் உங்களுடனிருக்க வேண்டும் என அந்த ஜன்மங்களில் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தவர்கள். அன்று அன்னை அவர்கட்குக் கொடுத்த வரம் இன்று அவர்கள் வாழ்வில் பலித்தது. அவர்கள் கேட்டதை மறந்துவிட்டார்கள். கிடைத்தது பெரியது என்று இருந்துவிட்டார்கள். அதனால் இந்த ஜன்மத்தில் அன்னையுடனிருந்தால் போதும், வேறெதுவும் வேண்டாம், யோகமும் வேண்டாம் என இருந்துவிட்டார்கள் என அன்னை கூறுகிறார். அன்னையின் அருகிலிருக்க என்ன தவம் செய்ய வேண்டும் என்பதைச் சோதனை செய்துபார்த்தால் தெரியும். அன்னை வசித்த அறையையும் இன்று வருஷத்தில் இருமுறைதான் திறக்கிறார்கள். பகவான் வசித்த அறையை இன்று தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தரிசிக்கின்றார்கள். அவர் சமாதியானபின் நெடுநாள்



வரை அது போலில்லை. பல வருஷம் கழித்து சிலரை அன்னையே பாஸில் கையெழுத்திட்டு அனுமதிப்பார்கள். பல ஜென்மங்கள் பிரார்த்தனை பலித்து இந்த ஜென்மத்தில் அது கிடைக்க வேண்டும். கிடைத்ததால் நம் நிலையிலிருந்து உயரமுடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. உயருவது, நம் முயற்சி, சுபாவம், அம்சம், அதிர்ஷ்டத்தைப் பொருத்தது.

பெரிய இடங்களில் அருகிலிருப்பதன் பலன்கள் என்ன? அதனால் மட்டும் சில பலன்களை ஏன் பெறமுடியாது? என்பதன் சட்டங்களைப் பொதுவாகவும், குறிப்பாகவும் எழுதுகிறேன்.

1) பெரிய இடத்திற்கு அருகில் வர ஏதாவது ஒரு வகையில் பெரிய அம்சமின்றி முடியாது.

2) வந்தபின் தானும் பெரியதாக உயர்வது என்பது, வந்ததால் மட்டும் முடியாது.

3) வந்தபின் முயற்சியாலோ, அம்சத்தாலோ, அதிர்ஷ்டத்தாலோ, சுபாவத்தாலோ, சூழலாலோ உயரமுடியும் என்பது உண்மை என்றாலும், அதற்கு உண்டான பலன் மட்டுமே வரும். முயற்சியால் முழுப் பலன் வரும், ஓர் அம்சத்தால் எல்லாப் பலன்களுமோ, அடுத்த பலனோ வாராது.

4) அருகிலிருப்பது வாய்ப்பை அளிக்கிறது. சுபாவம் எந்த அளவுக்கு உயரலாம், முயன்றால் உயரலாம் என்பதை நிர்ணயிக்கும். முயற்சி இருக்கும் வாய்ப்பைப் பூர்த்தி செய்யும். சூழல் இருப்பதை ஆதரிக்கும். அதிர்ஷ்டமிருந்தால் அடுத்த ஜன்மத்தில் பூர்த்தியாக வேண்டியது இப்பொழுதே பூர்த்தியாகும்.

5) வாய்ப்புக்கு எதிரான குணங்களிருந்து அதை வலியுறுத்தினால் அதுவே மேலே போவதைத் தடுக்கும். இருப்பதையும் அழிக்கும்.

6) Skill திறன், attitude நோக்கம், motive ஆழ்ந்த நோக்கம், opinion அபிப்பிராயம், values பண்புகள் வாய்ப்பை அனுபவிக்கும் அளவை நிர்ணயிக்கும்.

நம் நாட்டு சுதந்திரப் போராட்டத்திலும், அரசியலிலும், பொதுவாழ்விலும் இருந்த சிலர் பெற்ற வாய்ப்புகளையும், அதனால் உயர்ந்ததையும், அதனாலும் உயரமுடியாததையும் மேற்சொன்ன சட்டங்களை விளக்கும் வாயிலாக எழுதுகிறேன்.

- மோதிலால் நேருவின் மூதாதையர் மொகலாயச் சக்ரவர்த்திகட்குப் துவ்பாஷிகளாக (translators) இருந்து பெரும் செல்வாக்கும், செல்வமும் பெற்றனர். மோதிலால் "இந்தியா சுதந்திரம் பெற்றால் நானே முதல் பிரசிடெண்ட்" என்று அடிக்கடி சொல்வார். Federal Court பெடரல் கோர்ட்டிலும், பிரிவீ கௌன்சிலிலும் வக்கீலாக இருந்த பெருஞ்செல்வர். நேர்மைக்கும், திறமைக்கும் அவர் போன்றவரை தாம் பார்த்ததில்லை என நேரு சொல்வார். அவருடைய சந்ததி 3 தலைமுறைகளாகப் பிரதமராக இருந்தார்கள். மகாத்மா காலடியில் நேரு இருந்ததால், அவர் நேருவைத் தலைவராகத் தயார் செய்தார்.
- முதன்மந்திரி, பிரதம மந்திரி செக்ரடேரியட்டில் குமாஸ்தாவானாலும் செல்வாக்கு அதிகம். ஆனால் குமாஸ்தாவின் சர்வீஸ் நிலை மாறாது.
- 8-ஆம் வகுப்பு படித்த V.P. மேனன் திறமையாலும், ஆங்கில அறிவாலும், குமாஸ்தாவாகி, மத்திய சர்க்கார் உள்துறை காரியதரிசியாகி, கவர்னராக ரிடையராகி, சுதந்திரத்தைப்பற்றி 10 வால்யூம் எழுதினார்.
- எவ்வளவு பெரிய நூலகத்திலும் புத்தகங்களைத் துடைத்து வைப்பவருக்கு அறிவு வருவதில்லை.
- வேப்பூர் திருடர்களை திருத்த அவர்களுக்குத் தறி கற்றுக்கொடுத்து, படிக்க வைத்ததில் ஒரு பையன் M.A. பாஸ் செய்து மத்திய சர்க்கார் அதிகாரியானான்.
- விதவையாகி இட்லி சுட்டு விற்றவர் மகன் SSLC பாஸ் செய்து தாலுக்காபீஸ் குமாஸ்தாவாகி, திறமை, நேர்மை, ஆங்கில அறிவால் D.R.O. வாக ரிடையரானான்.
- மத்திய சர்க்கார் மந்திரியாக நெடுநாள் இருந்து, கவர்னராக ஒய்வு பெற்றவருடைய ஒரே மகன், திறமை, பொறுப்பு இல்லாததால் T.V. காபினட் செய்து விற்கமுடியாமல், வீடு கட்டும் காண்ட்ராக்டராக இருக்கிறான்.



- புத்திசாலியான வேலைக்காரி மகன் தாய் வேலை செய்த வீட்டின் உதவியால் படித்து இன்ஜீனியரானான்.
- ரோடு மேஸ்திரி மகன் 60 ஆண்டுக்குமுன் M.A. படித்தும் 10 ஆண்டு வேலையில்லாமலிருந்து பல்கலைக்கழக ஆசிரியராகி, இலட்சியச் சேவையால் பேராசிரியராகி, வேலையை இழந்து, உயிருக்கு ஆபத்து வந்து, நேரிடையாய் MLC ஆக அழைக்கப்பட்டும் பயத்தால் இழந்து பேராசிரியராகவே ஒய்வு பெற்றார்.
- ஞானசித்தி பெற்றவருக்குச் சமையல் செய்தவர், சித்திபெற்றவர் இறந்தபின் சமஸ்கிருத ஸ்லோகம் உள்ளிருந்து எழுந்ததால் நாட்டில் பிரபலமானார்.
- இங்கிலாந்தில் cabin man ரயில்வே கூலியாக இருந்தவர் தென்னிந்திய இரயில்வேயில் ஜெனரல் மானேஜரானார்.
- அந்தமான் ஜெயில் சூப்ரரெண்ட்டின் மகன் சென்னையில் கல்லூரியில் பயிலும்பொழுது சுதந்திரப் போராட்டத்தில் மாணவர் தலைவனாகி, அந்தமான் M.P.யாகி, மத்திய மந்திரியானார்.
- ஜமீன்தார் மகன் வக்கீலுக்குப் படித்துவிட்டு முதன்மந்திரி ஆதரவால் M.P.யாகி, பேச்சுத்திறமையால் மத்திய சர்க்கார் மந்திரியாகி, கவர்னரானார்.
- இன்கம்டாக்ஸ் ஆபீஸ் குமாஸ்தா வேலையை இராஜினாமா செய்து சுதந்திரப் போராட்டத்தில் கலந்து ஜெயிலுக்குப்போய், தம் கட்சி சிதறியதால் தம் வாழ்விலும் சிதறி, பணக்காரர் உதவியை வாழ நாடி, சொரணையையும் இழந்து, எந்தப் பதவியும் பெறாமல், போராடி இறந்தார்.
- கிரீஸில் கவி ஒருவருடைய வேலைக்காரிக்கு ஜுரம் வந்தபொழுது கவியின் செய்யுள்களை மனப்பாடமாக ஒப்பித்தாள்.
- அபரிமிதமான திறமைசாலி தாம் சேர்ந்த கட்சி முன்னுக்கு வராததால், அதன் அகில இந்தியத் தலைவராகி, M.P., MLA.,

எதிர்கட்சித் தலைவராகி, பிறரால் முதன் மந்திரி பதவிக்குரியவர் எனப் போற்றப்பட்டார்.

- நேர்மையான கணக்குப்பிள்ளைக்கு 200 ஏக்கர் முதலாளி தாம் சென்னைக்குப் போவதால், நிலத்தை அவரிடம் கொடுத்து, இதில் சம்பாதித்து, இதன் கிரயத்தை எனக்கு மெதுவாகக் கொடு என்றார்.
- M.A. பட்டதாரிக்கு 85ரூபாய் சம்பளமுள்ள நாளில் சிலோனில் SSLC படித்து சரளமாக ஆங்கிலம் பேசுபவர் சென்னைவந்து நூல் விற்கும் கம்பனியில் சேல்ஸ் மானேஜராக ரூ.1000/- சம்பளம் பெற்றார்.
- LMP டாக்டர் இலட்சியத்தால் சிம்ஸன் கம்பனி டாக்டராகி, ஆராய்ச்சியால் industrial medicine தொழிலுக்குரிய வைத்தியத் துறையில் சிறந்து ஆசிய மகாநாட்டுக்குத் தலைவரானார்.
- சாதுரியமான எஸ்டேட் கணக்குப்பிள்ளை ஊரறியத் திருடினாலும், முதலாளியின் நம்பிக்கையை இழக்காமல் முதலாளியைவிட அதிகம் திருடிச் சேர்த்துவிட்டான்.
- பிரபலமான முதன் மந்திரிக்கு மனைவி என்பதால் தாமும் கொஞ்சநாள் முதன் மந்திரியானார்.
- பெரிய குடும்பத்துப் பையன் அட்டண்டர் வேலைக்குப் போனாலும் பெரிய முதலாளிகளால் அவர் இனிமைக்காக ஆதரிக்கப்பட்டு, துரோகத்திற்காக விலக்கப்பட்டு அரை அங்குல முன்னேற்றமில்லாமல் ஒய்வு பெற்றார்.
- அளவுகடந்த உழைப்பு, திறமையும் உள்ளவர்களுக்கு வாய்ப்பு என்று வந்தபொழுது அவர்கள் தொழிலில் 30 வருஷமாக இழந்த அனைத்தையும் 5,6 வருஷங்களில் பெற்று தலைமைப் பதவிக்கு வந்து, முதன்மையாக முன்னணிக்கு வந்தனர்.
- வண்டிக்காரன் மகன், பள்ளிக்கூடம் போகாதவன், தேசபக்தருடனிருந்ததால் தவறாக ஜெயிலுக்குப் போய், அங்குப் படிக்கக் கற்றுக்கொண்டு, பேச்சாளனாகி, தமிழ்நாடு முழுவதும் பிரபலமாகி, MLCயாகி, பெரிய தொழிலதிபர்களும் நாடி வரும் நிலைமை ஏற்பட்டு சாஸ்திரி, இந்திராவையும் சந்தித்துப் பேசும் அளவுக்கு உயர்ந்து நின்றான். திறமையும், உழைப்பும், வாய்ப்பால் பலன் தந்தன.
- நெடுநாள் தொண்டு பலன் தந்து கட்சியின் இரண்டாம் நிலைத் தலைமையிலேயே இருந்து, படிப்பின் சிறப்பாலும், அனுபவ முதிர்ச் சியாலும், இனி தமக்கு எதிர்காலமில்லை, M.P. எலக்ஷன் ஜெயிக்க முடியாது என்று நிற்காதவருக்கு பிரதமமந்திரி பதவி மெஜாரிட்டி கட்சித் தலைமைக்கு வந்து, பிரதமராக இருந்தார் ராவ்.
- தகப்பனாரின் முழுத் திறமையுடன், பரம்பரையின் முழுப் பலத்துடன், M.P. பதவியும் நாடாமலிருந்தவருக்குப் பிரதமமந்திரி பதவி தேடிவந்தது.
- பிரதமர் பதவி வேண்டியதில்லை, விமானம் ஓட்டுகிறேன் என்றவர் மீது பிரதமர் பதவி திணிக்கப்படும் அளவு பரம்பரைத் திறமை நிறைந்திருந்தது.
- ஜமீன் கணக்குப்பிள்ளை மகன் வக்கீலாகி தேசசேவை செய்து ஜமீன்தார் பெற்ற முதல் மந்திரி பதவியைப் பெற்று, கவர்னர் ஜெனரலாக உயர முடிந்தது.
- வேதம், உபநிஷதங்களை ஊன்றிப் பயின்றால், ஆன்மீகப் பலன் உண்டு. ஆன்மீகப் பலன் பெறமுடியாதவர்க்கு ஆங்கிலம் அற்பு தமாகத் தெரிந்ததால் உலகப் புகழ் வந்து, ஜனாதிபதியாக்கியது.
- இளம்விதவை பெற்ற பிள்ளைகள் அறிவாலும், அருளாலும் உலகப்புகழ் பெற வந்த வாய்ப்பை வெறுத்து ஒதுக்கி பிறப்புக்குரிய துரோகத்தைப் பாராட்டி, துரோகத்தின் பரிசைப்பெற்று தங்கள் பெரும் ஸ்தாபனங்களில் தலைமைப் பதவி பெறும் வாய்ப்பையும் பொறுப்பற்ற வெறுப்பால் தவறவிட்டு, அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பை அடுத்தவர்கள் பெற்றதைப் பார்த்தும் அறிய முடியாமல், வேதனைப்படுபவர் இருவர்.
- நதி தீரத்தில் கருடன் காலிலிருந்து விழுந்த எலியைப் பெண் குழந்தையாக்கி வளர்த்த ரிஷி, அவளுக்குச் சூரியன், இமவான், சந்திரன் போன்ற வரன்களை அளித்தபொழுது, அவள் அவற்றை எல்லாம் மறுத்து மீண்டும் எலியாகி, எலியை மணந்தாள்.
- கல்கத்தா ஹைகோர்ட் பிரதம நீதிபதி, கல்கத்தா பல்கலைக்கழகத் துணைவேந்தராகி, நாட்டில் அவர் கண்ணில்பட்ட திறமைவாய்ந்த

இளைஞர்களை முன்னுக்குக் கொண்டுவந்தார். அவர் மகன் அவர் பதவிக்கு வந்து, மத்திய மந்திரியானான். அன்னையைத் தரிசிக்க அவர் வந்தபொழுது “இந்தியாவை உச்சகட்டத்திற்குக் கொண்டுவரக் கூடியவர் இவர்” என்றார் அன்னை.

- செல்வரும், தேசபக்தரானவருமான ஒருவரின் ஒரே மகன் திறமை, நாணயம், நல்ல குணமற்றவன். டாக்டரை மணந்து ஹைகோர்ட் வக்கீலாகி கேஸே வாராமல், வாய் சவடாலுடன் காலம் கழித்து வாழ்க்கையை முடித்தான்.

பெரிய இடத்திலிருப்பது வாய்ப்பு. வாய்ப்பு தானே பலன் தாராது. ஏதோ ஒருமுறை தானே பலனும் தரும். ரஷிய அரண்மனையில் **barmaid** வேலையாக இருந்த காதரீனை அவள் இனிமைக்காகப் போற்றாதவரில்லை. **Peter the Great** பீட்டருக்கு அவள் மேல் பிரியம். பீட்டருக்கு அளவு கடந்த கோபம் வந்தால் அடுத்த சில நாள் அதற்கு ஆயிரம் பலியுண்டு. அவனுக்குக் கோபம் எழும் அறிகுறிகளை காதரீன் கண்டவுடன் அவன் தலையைத் தன் மார்பில் பொருத்தி இதமாக வருடிக்கொடுத்து கோபத்தைக் கரைப்பாள். சக்ரவர்த்தியின் கோபம் வேலைக்காரியின் இனிமைக்கு அடிமையாயிற்று. காதரீன் அவன் மனைவியானாள். வாய்ப்பு பெரியது. அது பலன் தர பலன் பெறும் அம்சங்கள் – திறமை, பண்பு, அறிவு, நாணயம், உழைப்பு, அம்சம் – தேவை. அம்சமிருந்தால் அதுவே ஏதோ ஒரு சமயம் பலன் தரும். அம்சம் பலன் தர தேவையான மற்றவற்றைக் கொடுத்தால் பலன் வருகிறது. இல்லையெனில் உயர்ந்த இடத்தின் தாழ்ந்த மனிதனாக இருக்க வேண்டியிருக்கிறது. வாய்ப்புப் பலனாகப் பழுத்துப் பூர்த்தியாவது நம்மைப் பொறுத்தும், மற்ற இதர விஷயங்களைப் பொறுத்துமுள்ளது. படிக்காத தொண்டர் பகவான் ஸ்ரீ அரவிந்தர் திருவடியில் வாழ்வைக் கழிப்பதே பாக்கியம். அதனால் மட்டும் இருள் அகலாது. இருள் அகல ஞானம், பக்தி, சேவை, அடக்கம், சரணாகதி தேவை. அவையில்லாவிட்டாலும் ஓரிரு புள்ளியாக ஒளியை அருள் கொடுக்கிறது. அறியாமையால்



செயல்படும் அகந்தை அதை மாற்றி ஓரிரு புள்ளி தவிர மீதி அனைத்தும் ஒளி என்று கொள்கிறது.

❋ ❋ ❋

### 612) புதுமை உள்ளே எழுவதால், புத்துணர்ச்சி பொங்கி எழுகிறது.

**Freshness** என்ற கருத்தைத் தமிழில் இங்கு புதுமை என்று குறிப்பிடுகிறேன். **Freshness is indicated by a surge of fresh energy** என்று ஆங்கிலத்தில் எழுதியதை தமிழில் மேற்சொன்னவாறு மொழிபெயர்த்தேன். சிறுவயது வளரும் பருவமாதலால் காலையில் எழுந்தவுடன் உடலும், உணர்வும், மனமும், புத்துணர்வால் நிரம்பியிருக்கும். வயதானால் அது இருக்காது. புதுக் கருத்து மனத்திற்கும், புதிய நட்பு உணர்வுக்கும், புதிய காரியம் செயலுக்கும் புத்துணர்வை அளிக்கும். புதிய நோக்கம் ஏற்பட்டால், எல்லாச் சொற்களிலும் புத்துணர்வு ஏற்படும். புதிய இலட்சியத்தை ஏற்றால், புது வாழ்வு மலர வேண்டிய தெம்பு நிரந்தரமாக எழுந்தபடியிருக்கும்.

செல்வம் வளமாக உள்ள குடும்பங்களில் உள்ளவர் உடலில் ஒரு செழிப்புத் தெரியும். மனநிறைவு அதனால் ஏற்படும் **(security)** பாதுகாப்புணர்வு, தெம்பு மனத்தை நிரப்பி வழிந்து உடலில் வெளிப் படுவதால் தோலிலும், சதையிலும் மினுமினுப்பு இருக்கும். பதவியிலுள் ளவர்களுக்கும் இது ஓரளவு இருக்கும். குடும்பத்தில் அனைவரும் பிரியமானவர்கள், கடுஞ்சொல் காதில் விழாது, எதிலும் இனிமை நிறைந்துள்ளது என்ற குடும்பத்து குழந்தைகள் முகத்தில் அன்பால் இதே செழிப்பு தெரியும். பிறவியில் புத்திசாலித்தனமிருந்து, படிப்பால் அறிவு அதிகமாகப் பெற்றவர்க்கு முகம் அறிவால் பிரகாசமாக இருக்கும். பூஜை, பக்தி போன்றவை, ஞானம் கொடுக்கும் தேஜஸை முகத்தில் வெளிப்படுத்தும். உலகில் பலருக்கு இல்லாதது, சிலருக்குக் கிடைப்பதால், அவர்களைப் பொறுத்தவரை புதுமை இப்பலனை அளிக்கிறது. இதுவரை உலகிலில்லாத உணர்வின் செழிப்பை, ஜீவியத்தின் நிறைவாக அன்னை அளிப்பதால், அன்னையை

உணர்விலோ, ஜீவியத்திலோ ஏற்றால், உள்ளமும், உணர்வும் புத்துணர்ச்சி பெறும்.

அன்னையை முழுமையாக ஜீவன் ஏற்ற நிலையில் நமக்குக் கிடைப்பது உலகில் இன்று உச்சகட்டத்திலுள்ளது. அன்னை அதைத் தவறாது அனைவருக்கும் கொடுக்கிறார். நம்மால் பெற முடியாமற் போகிறது. பெறுவதற்குரிய சாதனங்கள் அநேகம். அவற்றுள் புத்துணர்ச்சியும், புதுமை என மேலே குறிப்பிடுவதும் ஒன்று. பொதுவாக உள்ளே எழும் புத்துணர்ச்சி அன்னை உள்ளே நிறைந்திருந்தால் அது அன்னையின் புத்துணர்ச்சியாக **(Mother's fresh energy)** இருக்கும். இதை இயல்பாகச் செய்வது சமர்ப்பணம். சமர்ப்பணம் வாழ்வை அன்னை வாழ்வாகத் துலக்கப் பயன்படுத்தும் வழிகளில் புத்துணர்ச்சியும் ஒன்று.

அதற்குண்டான கருவியில்லாமல் மரத்தில் துவாரம் போட முனைவது சிரமம். துவாரம் போடும் கருவி **(drill)** பெருமுயற்சியை எளிமையாக்குகிறது. **(Powerdrill)** மின்சாரத் துரப்பணம் மேலும் எளிதாக்குகிறது. சாதாரண மனிதனுக்குப் புத்துணர்ச்சிக் கருவிபோல. அன்னை கருவிக்கு மின்சாரசக்தி கொடுப்பதுபோல் ஆன்மீகச் சக்தியை அளிக்கிறார்.

பொதுவாகப் புதுமை உணர்வு பெற மனம் கடந்ததைக் கருதக் கூடாது. தெம்பு அபரிமிதமாக இருக்கவேண்டும். எதையும் புதிய நோக்கோடு புரிந்துகொள்ள வேண்டும். புதிய மனப்பான்மையை நாட வேண்டும். இரண்டு பரமவைரிகள். ஒருவர் பெயரை அடுத்தவர் கேட்கப் பிரியப்படமாட்டார். அவர்களில் ஒருவரிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்து, இதனுள் பெரிய சக்தியுள்ளது. முழுவதும் புதியதாக மனம் மாறிப் புதுமை உணர்வு எழுந்தால் அதன் மூலம் எழும் சக்தியால் எதையும் சாதிக்கலாம் எனக் கூறியதை அவர் ஏற்று எதிர்ப்புணர்வை மாற்றி நட்புணர்வாக்கச் சம்மதித்த சமயம், ஆஸ்பத்திரியில் ஒருவர் சேர்ந்தார். அவருக்கு முக்கியச் சிகிச்சை நேரம் தியான அறை பல்பு நின்றுவிட்டது. அன்னை சம்பந்தமான புத்தகத்தைப் பிரித்துப் பார்த்ததில் மரணம் இயல்பானது என்றிருந்தது.



மறுநாள் அவருடலில் சூட்சுமப்பார்வைக்கு மட்டும் தெரியுமாறு கறுப்பு படிந்திருந்தது. நின்ற பல்ப், புத்தகம் சொல்வது, படிந்த கறுப்பு அத்தனையையும் மாற்றும் சக்தி புத்துணர்வுக்குண்டு. மனம் மாறியது. புத்துணர்வு ஒரு கீறல் போல் எழுந்தது. அவர் போய்விட்டார். அடுத்த அரை மணியில் அவருடம்பில் கருமையைக் கண்டவர் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து, கருமை விலகுகிறது, பெரும்பாலும் விலகிவிட்டது என்றார். மறுநாள் காலை முழுவதும் விலகியது. இது புத்துணர்வின் சக்தி.

* * *

**613) நோக்கம் என்பதே மனிதனைக் குறிக்கிறது. ஞானம், பக்தி, செயல் சேருமிடத்தில் மனிதனுக்கு நோக்கம் பிறக்கின்றது என்பதால் பகவத்கீதை நோக்கத்தைச் சரணம் செய்யச் சொல்கிறது.**

***நோக்கமே மனிதன்.***

ஒரே சந்தர்ப்பத்திலிருந்து இருவர் பத்து வருஷம் கழித்து உயர்ந்தும், தாழ்ந்துமிருந்தால் அவர்கள் நோக்கம் உயர்ந்தும், தாழ்ந்துமிருக்கும். உழைத்து வாழவேண்டும் என்ற நோக்கமுடையவன் உயர்வதையும், யார் உதவியாவது பெற்று வாழ வேண்டுமென்பவன் இருக்கும் நிலையிலிருந்து இறங்குவதையும் காண்கிறோம்.

உலகம் இயங்குவது ஒரு சட்டப்படி. உயர்வதும் இன்னொரு சட்டப்படி. உயர்வதற்குரிய கருவிகள், சாதனங்கள் பல. முதற்கருவி உழைப்பு. **Skill** திறமையால் உழைப்பு உயர்வதால் திறமையான உழைப்பு, வெறும் உழைப்பைவிட உயர்ந்தது. இவையிரண்டும் உடலைச் சார்ந்தவை. உற்சாகமிருந்தால் உழைப்புக்கு அதிக சக்தியுண்டு. உற்சாகத்திற்குப் பல நிலைகளுண்டு. அதை நிர்ணயிப்பது பலன். பெரிய பலன் அதிக உற்சாகத்தையும், சிறிய பலன் சிறிய உற்சாகத்தையும் அளிக்கும்.

எந்தப் பலனை நாடுகிறோம் என்பது நாமறிந்ததைப் பொருத்தது. அறிவு அதிகமானால், பலன் அதிகமாகும். அனுபவம் அறிவை உயர்த்தும். அறிவு அனுபவப்பட்டால், அபிப்பிராயம் ஏற்படும். ஏற்கனவே படிப்புக்குச் செலவு செய்வது வீண் என்ற அபிப்பிராயம் கிராமத்திலிருந்தது. இன்று படிப்பு முக்கியம் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. அபிப்பிராயம் அறிவு நிலையை உயர்த்தும். அபிப்பிராயமிருந்தால் உணர்வு அதிகப் பலனை நாடி உழைப்பின் திறன் அதிகமாகச் சாதிக்கும். அபிப்பிராயத்திற்கும் சக்தியை அளிப்பது உணர்வு. உணர்வு ஏற்றுக்கொண்ட அபிப்பிராயம் அதிகமாகப் பலிக்கும். உணர்வு ஏற்றுக்கொண்ட அபிப்பிராயத்தை நோக்கம் என்கிறோம். உழைப்பு, திறமை, உற்சாகம், அறிவு, அனுபவம், அபிப்பிராயம், உணர்வு என்ற நிலைகளுக்கு உயர்ந்த மனிதன் முடிவாக உணர்வும் அபிப்பிராயமும் சேர்ந்த நோக்கத்தைப் பெறுகிறான். எனவே நோக்கமே மனிதன்.

முன்னேற்றமில்லாதவனுக்கு, முன்னேற்றமுள்ளவனுடைய நோக்கத்தை ஏற்றுக்கொண்டால், முன்னேற்றம் வரும். முன்னேறாதவன் இக்கருத்தை ஏற்றுக்கொண்டால் தன் நோக்கத்தை மாற்றுவது எளிதன்று எனக் காண்பான். யாரைப் பார்த்தாலும் உதவி கேட்டு வாங்குபவனை, யாரையுமே உதவி கேட்காத அவனைப்போன்ற ஒருவரைக் காண்பித்து நீ உள்ளூரில் சாதாரண வக்கீலாக இருக்கிறாய், அவன் உன்னைப்போன்றவன், ஹைகோர்ட்டில் பெரிய வக்கீலாகி விட்டான், ஒரே வித்தியாசம் நோக்கம் என்று கூறினால் அவன் ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். மாறுவது எவ்வளவு சிரமம்? மாறினால் எவ்வளவு பெரிய பலன்? அதனால் நோக்கமே மனிதன்.

சரணாகதியை பகவத்கீதை வலியுறுத்துகிறது. மனிதன் தன் நோக்கத்தைச் சரணம் செய்ய வேண்டும் என்கிறது. நோக்கம் சரண் செய்யப்பட்டால், முழு மனிதனும் சரணாகதி



யடைந்துவிடுகிறான். அபிப்பிராயமும், உணர்வும் சேர்ந்து நோக்கம் எழுவதாகச் சொன்னோம். ஞானம் அபிப்பிராயத்தைக் குறிக்கிறது, பக்தி உணர்வைக் குறிக்கிறது. எனவே ஞானமும் பக்தியும் சேர்ந்து நோக்கத்தை உருவாக்குகின்றன. அதுவே செயலில் வெளிப்படுவதால், ஞானமும், பக்தியும், செயலும் சேர்ந்தது நோக்கம். இவற்றிற்குப் புறம்பாக மனிதனில்லை.

வாழ்வில் உயர, எந்தக் குறிக்கோளையும் எட்ட இதை ஒரு முறையாகப் பயன்படுத்தலாம். நாம் எந்த நிலைக்கு உயர வேண்டுமோ, எந்தக் குறிக்கோளை எட்ட வேண்டுமோ, அதற்குரிய நோக்கம் எது எனக் கண்டு, இன்று நாம் எந்த நோக்கத்தால் செயல்படுகிறோம் என உணர்ந்து, இன்றுள்ள நோக்கத்தைக் கைவிட்டு, குறிக்கோளுக்குரிய நோக்கத்தை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தால், நம் நிலை உயரும், நாம் விரும்பும் குறிக்கோளை எட்ட முடியும்.

இதைவிட சக்திவாய்ந்த முறை வாழ்வில் உயருவதற்கில்லை.

- தொடரும்

* * *

**ஜீவிய மணி**

சிறிய ஆத்மா இறந்தவுடன் பிறக்கும்.

# இம்மாதச் செய்தி

**அன்பின் ஆணைக்குக் கட்டுப்படுவதே உயர்ந்த வாழ்வு என்பது உலகம் அறிந்தது. அன்பு பக்தியாகி, பக்தி பவித்திரத்தால் உயர்ந்து, சரணாகதியால் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அன்பின் ஆணை தெய்வத்திருவுள்ளமாகிறது. திருவுள்ளத்தைத் தன் வாழ்வில் நிறைவேற்றும் பக்தன் வாழ்வை பரமபதமாக்கிக் கொள்கிறான். அவனை ஆணையிடும் அன்பு பரமாத்மாவின் பாதமலர்களின் இதழ்களாகும். இதழ் அவிழ்வதால் விரியும் மணம், சரணாகதியின் நறுமணமாகும்.**

**தீண்டிய திருவடிகளை நீங்காமல் சிரமீது தாங்கும் நித்திய பாக்கியம் சத்தியஜீவசொர்க்கம்.**

**"நினைத்தறியாத நிறைவை உன் இருபாதங்கள் என் தலை மீது நின்று கொடுத்தருளின. நிறைவை நிரந்தரமாக்கி என்னை நினதாக்கிக் கொள்வாய் அம்மா."**

❊ ❊ ❊





## லைப் டிவைன்

கர்மயோகி

## VIII. வேதாந்த ஞானம்

தெய்வீக வாழ்வு நம் இலட்சியம். மனித வாழ்வின் மையம் அகந்தை. ஆதியில் அதை சிருஷ்டித்தது சச்சிதானந்தம். இதுவே உண்மையானால் சச்சிதானந்தத்திற்கும், அகந்தைக்கும் உள்ள தொடர்பு என்ன? அத்தொடர்பின் ஜீவன் எது? தெய்வீக வாழ்வின் தத்துவமும், நடைமுறையும் அவ்விரண்டையும் பொருத்தது.

சச்சிதானந்தத்தை நாம் அறிவோம். அதைப்பற்றிய தெளிவும் நமக்குண்டு. சச்சிதானந்தம் நம் புலன்களுக்கு புலப்படாதது. மனித மனத்தின் இருப்பிடம் மூளை. சச்சிதானந்தம் அதன் எல்லையைக் கடந்தது. மனித மனத்தின் திறனுக்குள் நாம் உலகை – ஜடமான உலகை – அறியமுடியும். இவ்வுலகின் அம்சங்களையும் நாம் அறிய முடியும். அவை ஜடத்தின் ஜீவியத்தாலானது என்பதால் நமக்கு அவை விளங்கும். புலன்கள் நமக்கு உலகின் அம்சங்களை உணர்த்த முடி யும். சச்சிதானந்தம் என்பது புலன்களின் சாம்ராஜ்யத்தைக் கடந்தது. நாம் அவற்றைக் கற்பனையால் அறியலாம். எதிர்காலத்தை நிகழ் காலத்தில் அறியவல்லது கற்பனை. தர்க்கம் மூலமாகவும் அவற்றை அறியலாம். புலன்களால் அறிய முடியாததைக் கற்பனையாலும், தர்க்கத்தாலும் அறியலாம். பகுத்தறிவு என்பது அவற்றைப் போன்ற கருவி. மனம் இதைக் கருவியாகப் பயன்படுத்துகிறது.

பகுத்தறிவு இருவகைகளாகச் செயல்படும். தூய்மையாகத் தனித்தும் செயல்படவல்லது. புலன்களை நம்பி தூய்மையை இழந்தும் செயல்படும் தன்மையுடையது. வாழ்வில் பொருள்களும், மனிதர்களும் உண்டு. அவர்கட்குத் தோற்றமுண்டு. அத்தோற்றம் அவர்கள் செயல்களைப் பொருத்தது. செயலில் நம் மனம் உள்ளது போலி ருக்கும் தோற்றம். பயன்படும் கருவி பயன்படுத்துபவர் கண்ணுக்கு அழகாகத் தெரியும். இதில் அழகு என்பதை நிர்ணயிப்பது பயன்.

உள்ளது வேறு, உணர்வது வேறு. அழகான அற்புதமான துப்பாக்கியை ஒருவன் நமக்கு முன்னே கொண்டு வந்தால் அதன் அழகும் அற்புதமும் கண்ணுக்குத் தெரியாது. பயங்கரம் மட்டுமே விளங்கும். உணர்வு தோற்றத்தை முடிவாகக் கொள்ளும். நிகழ்ச்சியை ஆராய்வது உணர்வு. அதை உணர்வு தோற்றத்தின்மூலம் செய்கிறது.

பொருள்கட்குச் சத்தியம் உண்டு. அதனின்று வேறுபட்ட தோற்றமும் அவற்றிற்குண்டு. பகுத்தறிவு சத்தியத்தையறியாது. மேல் நிலையில் மாற்றத்தைக் காண்கிறோம். அது தோற்றம். பகுத்தறிவால் சத்தியத்தை அறியமுடியாது, தோற்றத்தை மட்டுமே அறியமுடியும். நம் புலனுணர்வுகளைப் பகுத்தறிவு ஏற்க மறுப்பதில்லை. ஆனால் அவற்றையே முடிவாகக் கொள்வதில்லை. அவற்றைக் கடந்து செல்ல வலியுறுத்தும். தோற்றத்தின் பின்னால் பொதுவான, மாறமுடியாத கருத்துகளுண்டு. அவை சத்தியத்தைச் சார்ந்தவை. திரைமறைவி லுள்ள சத்தியத்தை அடைய பகுத்தறிவு வலியுறுத்தும். செயலை அதைக் கொண்டுதான் நிர்ணயிக்கும். பகுத்தறிவால் தோற்றத்தைக் கடந்து உண்மையைக் காணமுடியும். அதனால் நேரடியாக முடிவுசெய்ய முடியும். அங்ஙனம் கருத்து உருவாகும். பகுத்தறிவு தன்னை வலியுறுத்திக் கூர்ந்து உணருவதே அது. அதுவும் தவறான முடிவைக் கொடுக்கலாம். முடிவு உணர்வைப் பொருத்தது என அறியலாம். ஆனால் அது உண்மையில்லை. இச்சலனம் சரியானது, தவிர்க்க முடியாதது. நம் அனுபவம் பிரபஞ்சத்தில் சிறுபகுதி. இச்சிறு பகுதியிலும் நம் கருவிகள் குறையானவை. குறையான கருவி தவறான முடிவைத் தருகின்றன. ஆனால் முழுமையை அறிய நாம் முனையவேண்டும். அதற்காகக் குறையான கருவிகளைக் கடக்க வேண்டும். அவற்றைத் தூர விலக்க வேண்டும். இருப்பினும் கருவிக்கு சக்தியுண்டு. அச்சக்தியை நாம் புறக்கணிக்க வேண்டும். புலன்கள் தவற்றை உண்மை என அறிவிக்கின்றன. பகுத்தறிவு அவற்றைத் திருத்த வேண்டும். மனிதத்திறமைகளில் பகுத்தறிவு தலையாயது. மனிதன் விலங்குகளைவிட உயர்ந்தவன். அவ்வுயர்வைத் தருவது பகுத்தறிவாகும்.



நம் அறிவு ஜடமானது. நம்மால் தத்துவ ஞானம் பெறமுடியும். பகுத்தறிவை முழுமையாகப் பயன்படுத்தி தத்துவத்தை அறியலாம். நம் ஜீவன் முழுமையுடையது. தத்துவ ஞானம் தெளிவானது. ஆனால் நம் ஜீவனுக்குத் திருப்தியளிக்காது. பகுத்தறிவுக்கு அவை பூரணத் திருப்தி தரும். இவை பகுத்தறிவுக்கும் சிருஷ்டிக்கும் உரியவை. நம் இயல்பு எப்பொழுதும் இருவகைகளாகப் பார்க்கின்றது. அதன் பார்வைக்கு, செயல், கருத்து என இரண்டு தோன்றுகின்றன. செயல் புலன்கட்குரியது. கருத்து மனத்திற்குரியது. எதுவும் முழுமையான தன்று. அனுபவம் இரண்டையும் சேர்த்துப் பூர்த்தி செய்யும். நாம் சத்தியத்தை நாடுகிறோம். நாம் நாடும் சத்தியம் நம் சாதாரண அனுபவத்திற்கப்பாற்பட்டது. புலனுக்குணர்வுள்ளதைப்போல் பகுத்தறிவுக்கும் உணர்வுண்டு. நாம் தேடும் சத்தியம் பகுத்தறிவின் உணர்வுக்குப் புலப்படும். எனவே, நமக்குப் புதியதோர் திறன் வேண்டும். அத்திறன் நம் சுபாவத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும். ஜடத்தைக் கடந்தது நம் நிலை. நாம் உணர்வால் அனுபவிக்கிறோம். உணர்வு வளர்ந்து பெற வேண்டிய திறனது.

ஒரு வகையில் நம் அனுபவங்கள் எல்லாம் உணர்வால் ஏற்பட்டவை. தத்துவப்படி, உணர்வின் மனத்தை, மனஸ் என்கிறார்கள். புலனுணர்வு மனத்தை எட்டுகிறது. மனம் விளக்கம் தருகிறது. அதனால் நம் உணர்வுகளெல்லாம் அனுபவம் தருபவை, அனுபவங்களெல்லாம் உணர்வாலானவை. மனத்தைத் தத்துவம் ஆறாவது அறிவு என்கிறது. மனம் மட்டும் அறிவு எனவும் கூறலாம். மற்ற புலன்கள் பார்வை, ருசி, தொடுஉணர்வு, கேட்பது, வாசனை என்பவற்றை மனத்தின் குறிப்பிட்ட திறன்கள் எனலாம். ஐம்புலன்கள் மனத்தின் கருவிகள். ஆனால் புலனுதவியின்றி மனம் நேரடியாக கேட்கும், பார்க்கும், நுகரும், தொடும், ருசிக்கும். நம் அறிவு இருவகையின. உணர்வாலான அறிவு ஒன்று. அடுத்தது பகுத்துணர்வது, பகுத்தறிவின் செயல். இரண்டும் இருவகைகளாகச் செயல்படும் தன்மையுடையன. ஒன்று அடுத்ததை நம்பி கலப்பால், தூய்மையற்றுச் செயல்படுவது. அடுத்தது தனித்துத் தூய்மையுடன் செயல்படுவது. பொதுவாக கலப்பால் செயல்படுவது புறநிகழ்ச்சியின்

அனுபவம். தூய்மையான செயல் அகவுணர்வுக்குரியது. புறத்தில் அறிவது பிறபொருள். அகத்தில் உணர்வது தன்னையறிதல். பிறபொருளையறிய புலன் தேவை. புலன்கள் தாங்கள் அறிந்தவற்றைக் கூறுகின்றன. அவை புலனுருவம் பெற்றவை. நாம் அதை ஏற்கிறோம். தன்னையறியும் பொழுது ஞானம் நேரடியானது. அது ஐக்கியத்தின் அடிப்படையையுடையது. நம் உணர்வுகளை நாம் அதுபோல் அறிகிறோம். நாமே நம் உணர்வாக மாறுகிறோம். நாமே கோபமாகிறோம். நாம் உயிரோடு இருப்பதை அறிவோம். அதற்கு நிரூபணம் தேவையில்லை. அது சுயமான தெளிவுள்ளது. இது ஐக்கியத்தால் ஏற்பட்டது. அதுவே பொருள்களின் சத்தியம். அனுபவம் ஐக்கியத்தாலெழுவது. அது இரகஸ்யமானது. அதன் உண்மையான அம்சம் நம்மிடமிருந்து மறைந்துள்ளது. நாம் உலகத்துடன் இரண்டறக் கலக்கவில்லை என்பதால் இந்நிலை. நாம் தனி உலகினின்று பிரிந்து நிற்கிறோம். உலகம் புறப்பொருள் எனவும் நாம் அதனின்று விலகிய அகவுணர்வு எனவும் கருதுகிறோம். பிரிவினை இருப்பதால் செய்தி பரவ புதிய உறுப்புகள் தேவை. அவ்வுறுப்புகளை மனிதன் உற்பத்தி செய்துள்ளான். அவை நம் ஐம்புலன்கள். ஏற்கனவே நமக்கு நேரடி ஞானமிருந்தது. அது இரண்டறக் கலப்பதால் ஏற்பட்டது. நாம் இன்று பெறும் ஞானம் மறைமுகமானது. அது ஜடமான தொடர்பால் வருகிறது. மனம் அனுதாபத்தால் அதை ஏற்கிறது. இதுவே வரையறை. அகந்தை, முதலிலிருந்து இதுபோன்று செயல்பட்டுவருகிறது. முழுப்பொய்யிலி ருந்து அகந்தை எழுகிறது. உண்மையான சத்தியத்தை தற்காலி கமான பொய்யால் மறைக்கிறது. நாம் இதை நடைமுறை உண்மை எனக் கொள்கிறோம்.

மனத்தில் அறிவு எப்படி அமைந்துள்ளது எனக் காண்கிறோம். அதேபோல் புலனறிவையும் உணர்கிறோம். நாம் அளவுக்குட் பட்டவர்கள் என அறிகிறோம். அவ்வரையறை உண்மையானதல்ல, தேவையானதன்று எனவும் அறிகிறோம். இது மனம் ஏற்ற பழக்கம். பழக்கம் பரிணாமத்தால் வந்தது. பார்ப்பதற்குக் கண்ணையும்,



கேட்பதற்குக் காதையும் மனம் நம்பியுள்ளது. கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதும் மனத்திற்கு அவசியமில்லை. நேரடியாக மனத்தால் பார்க்கவோ, கேட்கவோ முடியும். மனம் பழக்கத்தை ஏற்றது. கண்ணால்தான் பார்க்கமுடியும், காதால்தான் கேட்கமுடியும் என மனம் நம்புகிறது. புறஉலகின் பொருள்களுடன் மனம் பெற்ற தொடர்பு அது. புறஉலகை நாம் அறிய முயன்றால் கண்ணால் பார்க்கிறோம், காதால் கேட்கிறோம். புலன்களால் நாம் பெறும் மறைமுக அறிவு அவை. பொருள்களைப்பற்றியும், மனிதர்களைப் பற்றியும் நாம் பெறும் சிறு பகுதியான அறிவு அது. புலன்கட்குச் சிறு பகுதிமட்டுமே தெரியும். அதை மட்டுமே புலன்கள் நமக்குத் தரமுடியும். இதுவே நமக்கு முக்கிய பழக்கமாகிவிட்டது.

மனம் நேடிரயாகப் பொருள்களையும், நபர்களையும் அறியமுடியும். புலன்களின் உதவி மனத்திற்குத் தேவையில்லை. இது மனத்திற்கு இயல்பாக உள்ள திறமை. தற்சமயம் உடலால் ஆள மனம் சம்மதித்துள்ளது. மயக்கம் **hypnosis** தரும் முறையில் இவ்வுண்மையை நாம் அறிவோம். விழிப்பில் நாம் அதுபோல் சுதந்திரமாகச் செயல்படமுடியாது. விழிப்பு நேரடியாகத் தான் காண்பதை அறியும். உடலால் ஆளப்படும் நிலையில் மனம் இன்றுள்ளது. மந்திரவாதி ஒருவருக்குத் தூக்க மயக்கத்தைத் தருகிறான். மயக்கத்தால் மனம் விலகுகிறது. அடிமனம் **subliminal mind** விழிப்புறுகிறது. அதுவே உண்மையில் மனம் எனப்படும். அது சுதந்திரமாக இருக்கிறது. அதன் நேரடித் திறமை போதும். தன் உண்மையான திறமையை இந்நிலையில் மனம் வெளிப்படுத்தமுடியும். எப்பொருளையும் அதனால் தீண்ட முடியும். தனித்தும், தூய்மையாகவும் உள்ள நிலையிது. பொதுவாக மனம் புலன்களுடன் கலந்தும், தூய்மை இழந்துமுள்ளது. கண்ணை மூடிக்கொண்டு மனத்தால் பார்க்கமுடியும். கலப்பிருந்தால் அது முடியாது. விழிப்பில் அதுபோல் பார்ப்பது கஷ்டம். யோகத்தில் சிறிது முன்னேற்றம் அடைந்தவர்களும் இதை அறிவர்.

நம் புலன்கள் ஐந்து. தூய்மையான மனம் புதிய புலன்களை உற்பத்தி செய்யமுடியும். நாம் பொருள்களை நிறுத்து எடை

போடுகிறோம். கையில் எடுத்தவுடன் எடை தெரியும்படி, கைக்குப் பயிற்சியளிக்கமுடியும். மனத்தால் நேடிரயாகப் பொருள்களின் எடையை அறியமுடியும். தொடு உணர்ச்சி நமக்கும் பொருளுக்கும் தொடர்பு ஏற்படுத்துகிறது. பொருள்களுக்குப் பின்னால் என்ன இருக்கிறது எனப் பகுத்தறிவு நேரடியாகக் காணும் திறமையுடையது. இங்கும் பகுத்தறிவு பொருள்களுடன் தொடர்புகொள்ள உதவுகிறது. அறிவது மனம், பகுத்தறிவில்லை. அதேபோல் மனஸ் பயன்படும். மனம் புலன்களைக் கருவியாகப் பயன்படுத்தவில்லை. முதற் தொடர்புக்காகப் பயன்படுத்துகிறது. முரணானதை அறியவும் மனதால் முடியும். இது மேல் மனத்திற்குரியதன்று. புறவாழ்வுக்கும், மேல் மனத்திற்கும் மட்டும் உரியதன்று. பொருள்களை ஊடுருவி, அவற்றின் தன்மைகளை அறியவும், பிறர் எண்ணங்களை அறியவும் இது பயன்படும். மனத்தால் பிறர் எண்ணங்களை அறியமுடியும். அவர்களாகச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் முகக்குறி, தோற்றம், செயல்களை நாம் ஆராயவும் தேவையில்லை. அது ஓரளவு தெரிவிக்கும். அவை தவறாகவுமிருக்கும். நாம் காண்பதற்கு எதிரான கருத்தும் சரியாக இருக்கும். உள்ளுணர்வைப் பயன்படுத்தி அவற்றை அறியலாம். புறஉலகை நாம் அறிவால் ஆராய்கிறோம். நாம் அவற்றைப் புறக்கணிக்கலாம். செயல்கள் புறவாழ்வையும் பொதுவான செயலையும் குறிக்கும். இவை பயன்படா. புலன்கள் பயன்படும். அவை சூட்சுமமானவை, தூய்மையானவை. நம் திறன் வெளியில் செயல்படுவதால் ஏற்படுவது. ஜடமான மனம் அவற்றை நம்ப மறுக்கிறது. அதற்கு நம்பிக்கை இல்லை. அது தயங்குகிறது. அதன் பழக்கத்திற்குப் புலன்கள் கூறும் இச்செய்தி விபரீதமானது. நம் அன்றாட அனுபவத்திற்கு அது மாறானது, முரணானது. செயலுக்கு இப்புலன்கள் பயன்படா. அவற்றை முறைப்படுத்தமுடியாது. ஒழுங்காகச் செயல்படும் திறமையுள்ளவை அவையில்லை. பயன்படும் கருவியாக அவற்றால் மாற முடியாது. நம் செயலைப் புறத்தில் விரிவுபடுத்த முயன்றால், முதலில் எழும் பலன் இது. இதைப் பல வகைகளாகச் செய்யலாம். விஞ்ஞானரீதியாகவும், தற்செயலான முறையிலும் செய்ய முடியும். எவரும் சொல்லிக்கொடுக்காமல் சிலர் இதைப் பயில்வதுண்டு.



மேற்சொன்ன எதுவும் நமக்குப் பயன்படாது. **"புலனுணர்வைக் கடந்து, பகுத்தறிவின் உணர்வுக்கு எட்டும்"** என - புத்தி கிரஹயம் அதிந்திரியம் - கீதை கூறுகிறது. நம் திறமைகளை விரிவுபடுத்தவும், கருவிகளைப் பலப்படுத்தவும் அவை உதவும். சத்தியமும், உண்மையும் புலன்கட்குப் புலப்படுவதில்லை. பிரபஞ்சவாழ்வுக்குரிய பிரபலமான சட்டங்கள் பல. அவற்றில் ஒன்று, "பகுத்தறிவால் அறியக்கூடியது ஒன்று பிரபஞ்சத்திலிருந்தால் அதை அறியும் திறன் நம்முள் உண்டு." அனுபவத்தால் நாம் அதைக் காண வேண்டும். பகுத்தறிவுடைய பிராணிக்குரிய சட்டம் அது. அதுபோன்ற அனுபவம் நமக்கு ஒன்றுண்டு. நாம் உயிரோடிருக்கிறோம் என்று நாம் அதுபோல் அறிகிறோம். தன்னையறிவதாகும். இரண்டறக் கலப்பதால் ஏற்படும் அறிவு அது. அதை நாம் விரிவுபடுத்தலாம். அதனால் புதுத் திறனெழும். நம் ஆத்மாவுக்குச் சொந்தத் திறனுண்டு. அவற்றையறிய நமக்குத் தன்னையறியும் திறன் தேவை. இத்தன்னையறியும் திறன் விழிப்பானது. ஓரளவு இது நமக்குண்டு. நம் சிந்தனையில் இது உண்டு. இதை ஒரு சட்டமாகவோ, சூத்திரமாகவோ எழுதலாம். பாத்திரத்தை நாம் அறிந்தால் அதனுள் உள்ளவை புரியும் எனவும் கூறலாம். **"உடலையறிந்தால், உயிர் விளங்கும்".** மனம் தன்னையறியும் தன்மையுடையது. இதை நாம் அடுத்த நிலைக்குக் கொண்டுபோக முடியும். நம்மைக் கடந்து வெளியில் உள்ள **Self** புருஷனைப்பற்றி உபநிஷதம் கூறுகிறது. அது ஆத்மா, பிரம்மம். ஆத்மா பிரபஞ்சத்தின் உடல். பிரபஞ்சத்தை தன்னுட்கொண்டது ஆத்மா. ஆத்ம இரகஸ்யத்தை அறிய அது உதவும். நம்மால் அதை அனுபவிக்கமுடியும். அதுவே வேதாந்தத்தின் அடிப்படை. வேதாந்தம் பிரபஞ்சத்தை அறிய முயல்கிறது. தன்னையறிந்து அதன்மூலம் பிரபஞ்சத்தை அறிவது ***வேதாந்த ஞானம்.***

வேதாந்தம் மனத்தையும், அதன் அறிவையும் அறியும். மனத்திற்கு அனுபவம் உண்டு. பகுத்தறிவுக்கு தத்துவம் தெரியும். எவ்வளவு உயர்ந்தாலும் தத்துவம் சத்தியமாகாது. அது ஐக்கியம் தரும் ஞானமன்று. புருஷன் - சத்புருஷன் - யோகியோடு ஐக்கியமாகிப்

பெறும் ஞானம் வேதாந்த ஞானம். அவை மனத்தின் பிரதிபலிப்பு களே. நாம் மனத்தையும், பகுத்தறிவையும் கடக்க வேண்டும். மேல் உலகத்திற்கும் கீழ் உலகத்திற்கும் பாலம் அமைப்பது பகுத்தறிவு. விழிப்பில் பகுத்தறிவு செயல்படும். பரிணாமவளர்ச்சியில் நாம் ஆழ்மன ஆத்மாவாகிறோம். பரிணாமம் பரமாத்மாவை நோக்கி நம்மைச் செலுத்தும். ஆத்மா, பிரம்மம், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன் என்பது ஒன்றே. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறில்லை. பரமாத்மாவும், கீழுலகமும் அவனுடைய உருவங்களே. கீழ் உலகமான ஆழ் மனத்தின் மந்திரம் வாழ்வு. நாம் தேடுவது ஞானம். ஜீவியமான ஞானம் தேவை. ஆழ்மனத்தின் அந்த ஞானம் செயலுள் பொதிந்துள்ளது. வாழ்வின் மையம் செயல். பரமாத்மாவில் செயல் ஜோதியிலுள்ளது. ஞானம் ஜோதியினுள் இல்லை. ஆனால் ஜோதி ஜீவியத்தினுள் உள்ளது. நேரடி ஞானம் இவை இரண்டிற்கும் பொது. எதை அறிய நாம் முயல்கிறோமோ அதற்கும் நமக்கும் இடையே ஏற்படும் ஐக்கியம் நேரடி ஞானம். இருவரும் இணைந்து இருக்கும் நிலை அது. ஞானத்தால் நாமும், பிறரும் இணைகிறோம். ஆழ்மனத்தில் நேரடி ஞானம் செயலில் வெளிப்படுகிறது. செயல் என்பது பலன். ஞானம் என்பது ஐக்கியம். ஞானம் செயலினுள் மறைந்துள்ளது. பரமாத்மாவில் நிலைமை எதிரானது. ஜோதியே இங்கு தத்துவம், சட்டம். நேரடிஞானம் திரையின்றி வெளிப்படுகிறது. நேரடி ஞானம் என்பது ஞானத்தின் சிறப்பு, சிகரம். ஐக்கியத்திலிருந்து எழுவது அது. ஐக்கியம் செயலின் பலனுக்கு உதவும், அதை நிர்ணயிக்கும். அடிப்படையான உண்மையிலி ருந்து எழுவது அது. அதன் முடிவும் அதுவே. மேல் உலகத்தையும் கீழ் உலகத்தையும் இணைப்பவை பகுத்தறிவும், மனமும். இடைப்பட்ட கருவிகளாகச் செயல்படுகின்றன. ஞானம் ஜீவனுள் சிறைப்பட்டுள்ளது. மனமும் பகுத்தறிவும் சிறைப்பட்ட ஞானத்திற்கு விடுதலையளிக்கின்றன. ஞானத்தில் ஆதிசக்தியை அவை மீண்டும் பெற்றுத் தருகின்றன. தன்னையறிவது மனத்திற்குரியது. பொருளுக்கும் பாத்திரத்திற்கும் உரியது அது. சொந்த ஆத்மாவுக்கும், பிறருக்கும் உரியது. இவ்வழியே தன்னையறிதல் முடிவாக ஐக்கியத்தை



அடைகிறது. ஐக்கியம் தானே தெரியும். அத்துடன் பகுத்தறிவு நேரடி ஞானமாகிறது. நேரடி ஞானம் சுயம்பிரகாசமான ஞானம். இப்படி மனம் சத்தியஜீவியத்தில் தன்னிறைவு பெறுகிறது. இதுவே ஞானத்தின் சிகரம்.

வேதாந்தம் தன் முடிவுகளை இப்படி எடுத்தது. வேதாந்தத்தை தொடர்வது ஸ்ரீ அரவிந்தரின் குறிக்கோளில்லை. தெய்வீகவாழ்வே அவருடைய லட்சியம். அதை விரிவுபடுத்த விரும்புகிறார். வேதாந்தம் அவற்றைப்பற்றிப் பேசுகிறது. அந்த அளவுக்கு ஸ்ரீ அரவிந்தர் அதை விளக்குகிறார். தெய்வீக வாழ்வுக்குரிய முந்தைய நாள் அஸ்திவாரங்கள் வேதாந்தத்தில் சிறப்பாகக் காணப்படுகின்றன. எனினும் பழைய முறைகளைத் தொடராமல், புதியதை ஏற்படுத்துவதே அவர் எண்ணம். புதிய மனநிலைக்கு ஏற்றவாறு பழைய மனநிலையை மாற்ற வேண்டும். பழைய ஜோதி புதிய பிரகாசமாக வேண்டும். பிரம்மம் மாறியபடி உள்ளது. பிரம்மம் மாறுதலையறியாதது எனவும் நாம் அறிவோம். பழைய பொக்கிஷம் நம் முதல். வேலை புது இடத்தில். பழைய நிலையில் ஆரம்பித்து புதிய இலக்கை நோக்கிப் போவோம்.

ரூபமும், சலனமும் தோற்றம். அதுவே நமக்கு சத்தியம். இத்தோற்றத்தின் பின்னுள்ள அடிப்படை சத்தியம் – பிரம்மத்தை – வேதாந்தம் கண்டுகொண்டது. ஆராய்ச்சி மூலம் வேதாந்தம் இம்முடிவுக்கு வந்தது. அம்முடிவை சத் பிரம்மம் என்றனர். அது தூய்மையான சிருஷ்டி. விவரிக்கமுடியாத, அளவுகடந்த, தனித்தன்மை வாய்ந்த தூய்மையானது. நம் அன்றாட அனுபவம், எளிய எண்ணங்கள் சத்பிரம்மத்தை அறியமுடியாது. நம் வாழ்வின் எந்த நிலையும், எந்த நினைப்பும் சத் என்பதை நினைக்கத் தூண்டவில்லை. நாம் மனத்தாலும், புலனாலும் வாழ்கிறோம். புலன்கட்கும், புலனுணர்வுக்கும் சத்பிரம்மனோ, பிரம்மமோ புலப்படாது. நாமறிவனவெல்லாம் அதன் ரூபமும், அசைவுமேயாகும். ரூபங்களுண்டு. ஆனால் ரூபம் தூய்மையானதன்று. ரூபங்கள் கலப்பானவை, பல கலந்தவை, ஒன்று சேர்ந்தவை, பகுதியானவை. உள்ளே போனால், ரூபங்கள் அழிகின்றன. ரூபங்கள் அழிந்தாலும்,

அசைவும், மாற்றமும் அழியா. சத்பிரம்மத்தை நாமறிவோம். காலத்திலும், இடத்திலும் சத்பிரம்மமுள்ளது. அசைவாலும், மாற்றத்தாலுமிருப்பது சத். இடத்தில் அசைவும், காலத்தில் மாற்றமும் சத் இருக்கக்கூடிய நிபந்தனைகள். சத் பிரம்மத்தைப்பற்றி நாமென்ன அறிவோம்? நமக்குப் புலப்படும் எதுவும் சத்பிரம்மத்திலில்லை. உண்மையின் சில சுவடுகள் இவ்வசைவின் பின்னால் தெரிகின்றன. அசைவில் எதுவும் தெரியவில்லை. தன்னையறிதல் அவற்றை நமக்குணர்த்த வல்லது. மாற்றமில்லாத, அசைவில்லாத ஒன்று அங்கு தெரிகிறது. அது வாழ்வுக்கும், மரணத்திற்கும் அப்பாற்பட்டது. அது மாற்றங்களையும், ரூபங்களையும் கடந்தது. கதவு திறந்தால் சத்தியம் தெரியும். இது அக்கதவு. சத்தியம் என்பது உண்மையின் அற்புதம். சில சமயங்களில் கதவு ஒரு நிமிஷம் திறக்கும். சத்தியப்பிழம்பு நம்மை சிறிது தொடும். ஓர் ஒளிப் பிழம்பான ஞானம். நாம் மனத்தில் உறைகிறோம். மற்றொரு ஜீவியநிலையுண்டு. அது ஞானத்தின் நிலை. நாம் பலமாகவும், உறுதியாகவுமிருந்தால், சற்று திறந்த கதவு, நிரந்தரமாகத் திறக்கும். அது பெரும் மாறுதல்கட்கு ஆரம்பமாகும்.

ஆராய்ச்சியைக் கவனமாக மீண்டும் ஆரம்பிப்போம். நேரடி ஞானமே முதற் குரு. நாம் நம் மனதால் கட்டுப்பட்டுள்ளோம். நேரடி ஞானம் அதன் பின்னணியிலுள்ளது. அது திரைமறைவிலிருக்கிறது. நாமறிய முடியாத பிரம்மத்தினின்று மின்னற்பொறியாய் செய்திகள் நேரடி ஞானம் மூலம் வந்தபடியிருக்கின்றன. இதுவே உயர்ந்த ஞானத்தின் ஆரம்பம். பகுத்தறிவு அடுத்தபடி. ஞானம் அறுவடை செய்ததை அறிவு அனுபவிக்கிறது. நாமறிந்ததன் பின் விஷயமுள்ளது என நமக்கு அறிவுறுத்தியது நேரடி ஞானமேயாகும். இது மனிதனை விடாது தொடரும். தாழ்ந்த அறிவு இதற்கு முரணானது. மனிதனின் அன்றாட அனுபவங்கள் அனைத்தும் மறுக்கும் நிலையிது. மேலே கண்ணுற்றவை ரூபமற்றவை. ரூபமற்ற பிரம்மத்திற்கு ரூபம் தரும்படி நேரடி ஞானம் கட்டாயப்படுத்துகிறது. சொர்க்கம், அமரவாழ்வு, கடவுள் என மனிதன் அவற்றை முடிக்கிறான். அப்பாலுள்ளதைத் தனக்கு விளக்க மனிதன் எடுக்கும் மற்ற முயற்சிகளும் பல. நேரடி ஞானம் இயற்கையைப்போல வலிமையானது. அது இயற்கையின்



ஆத்ம ஜோதி. பகுத்தறிவின் மறுப்பை அது கண்டுகொள்வதில்லை. தன் அனுபவம் மறுப்பதையும் அது பொருட்படுத்துவதில்லை. அது சத்தியத்தையறியும். இயற்கை தோற்றமாதலால், நேரடி ஞானம் இயற்கையை ஏற்பதில்லை. நேரடி ஞானம் சத்தைவிட சத்புருஷனை நன்கு அறியும். சத்புருஷன் நம்முள் உள்ளான். நம்முள் ஜோதி சத்புருஷன். நேரடி ஞானம் அங்கிருந்து எழுகிறது. அதுவே கதவைத் திறப்பது. வேதாந்தம் உபநிஷதம் வழியாக சொல்லிய மந்திரங்கள் மூன்று, "சோ ஹம்", "சர்வம் பிரம்மம்", "தத்வமஸி" ஆகியவை - நானே பிரம்மம், அதுவும் பிரம்மம், அனைத்தும் பிரம்மம் - உபநிஷத மந்திரங்கள்.

அதன் இயல்புக்கேற்ப நேரடி ஞானம் திரைமறைவில் வேலை செய்கிறது. விழிப்பான இடங்களில், வீரியமற்ற பகுதிகளிலும் மனிதனில் நேரடி ஞானம் செயல்படும். விழிப்பில் நம் மனம் குறுகிச் செயல்படுகிறது. நேரடி ஞானம் தருவதை ஏற்கும் நிலையில் நம் கருவிகளில்லை. இயல்பு சத்தியத்தை நாடுகிறது. தெளிவான, முறையான உண்மையை அது நாடுகிறது. நேரடி ஞானத்தால் நம் இயல்பு நாடுவதை அது நாடும் வழியில் தரமுடிவதில்லை. நேரடி ஞானம் ஞானத்தை நேரடியாகத் தரமுயல்கிறது. நாளாவட்டத்தில் அது தன்னைப் பூர்த்தி செய்யும். எந்த ஞானத்தை நாம் மேல் மனத்தால் மட்டும் பெறமுடியும்? நேரடி ஞானத்தை நாம் பெற வேண்டுமானால் அது மேல் மனத்தில் எழவேண்டும். நேரடி ஞானம் நம்முள் முக்கியப் பகுதிகளை ஆட்கொள்ள வேண்டும். அதுபோல் நேரடி ஞானம் கிடைக்கும்வரை, அதன் இலட்சியம் பூர்த்தியாகாது. மேல் மனம் நேரடி ஞானத்தைப் பெறுவதில்லை, பகுத்தறிவால் ஆளப்படுகிறது. நம் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் மேல் மனத்திற்குரியவை. வேதாந்த காலத்தின் ஆரம்பம் நேரடி ஞானத்திற்குரியது. அது மாறி சிந்தனையும், பகுத்தறிவும் ஆட்சிக்கு வந்தன. ஆன்மவிழிப்பு மாறி தத்துவம் ஆட்சியை ஏற்றது. தத்துவம் பிறகு ஆட்சி பீடத்தை விஞ்ஞானத்திற்கு மாற்றியது. நேரடி ஞானம் பரமாத்மாவின் தூதுவன். அதுவே நம் உச்சகட்டத் திறமை. பகுத்தறிவு அதன் இடத்தை ஏற்றது. பகுத்தறிவு நம் ஜீவனில் உச்சியிலில்லை.

நடுவில் உள்ளது. பகுத்தறிவு மந்திரிபோன்றது. பகுத்தறிவு வழிவிட்டு உணர்வு ஆட்சிக்கு வந்ததா?

கலப்படமான பகுத்தறிவு வெளிவந்தது. மலை அடிவாரத்தில், சமவெளியில் நடமாடுவது பகுத்தறிவு. நம் அனுபவத்தைக் கடந்து செல்லும் திறனற்றது. ஜடமான மனமும், புலன்களும் உணர்பவை அவை. அவற்றிற்கு உறுதுணை தேடுவது மனித இயல்பு. சிருஷ்டியின் பாங்கு இது. ஆனால் இது மேலிருந்து கீழே வந்து, கீழிருந்து மேலே போகும் வட்டமாகும். ஒவ்வொரு முறையும் கீழுள்ளது, மேலிருந்து அதிகபட்சம் பெறுகிறது. மேலேயுள்ளது கீழே இருப்பதற்குத் தன்னை அர்ப்பணிக்கிறது. அதனால் தாழ்ந்த திறமைகள் உயர்ந்து வருகின்றன. இது அவசியம். ஒரு தொடர் சங்கிலி, தனித்தனியே முழுப் பலன் பெறும் முறை. இது இல்லாவிட்டால், ஒரு பகுதி முழுமையை ஆட்டி வைக்கும். நாம் அனாவசியமாக அவதிப்பட வேண்டும். நம் வாழ்வில் நாம் தனித்து நிற்போம். அதனால் நம் முன்னேற்றம் குறையும். இதன் மூலம் குறையை நிறைவு செய்கிறோம். நம் கரணங்களின் ஞானம் முழுமையான சுமுகம் பெறுகிறது.

இத்தொடரை நாம் உபநிஷதத்தில் காண்கிறோம். பிற்காலத்தில் இந்தியத் தத்துவம் இதைப் போன்றுமிருந்தது. வேத, வேதாந்த ரிஷிகள் நேரடி ஞானத்தையும், ஆன்மிக அனுபவத்தையும் நம்பியிருந்தனர். உபநிஷதக் காலத்தில் பண்டிதர்கள் சதஸ் நடத்தியதாகக் கூறுகிறார்கள். அது தவறு. விவாதம் என்றால் அது தர்க்கமாகவோ, விவாதமாகவோ, இருந்ததில்லை. ஆன்மீக அனுபவத்தையும், நேரடி ஞானத்தையும் ஒத்திட்டுப்பார்ப்பதே அவர்கள் விவாதம். சிறிய பிரகாசம், பெரிய ஜோதியை ஏற்கும். குறுகியது, குறையுடையது, தேவையில்லாதது, நிமிர்ந்து பரந்ததையும், பவித்திரமானதையும், அத்தியாவசியமானதையும் கண்டு தலை குனிந்து வணங்கி ஏற்கிறது. என்ன நினைக்கிறாய் எனக் கேட்பதில்லை. என்ன காட்சியைக் கண்டாய் என்றே கேட்கிறார்கள். தர்க்கம் என்றுமே உபநிஷதத்தில் தலைதூக்கி ஆட்சி செய்ததில்லை. ஞானம் பெரிய ஞானத்தை ஏற்கிறது. தர்க்கம் தலை வணங்குகிறது.



மனிதனுடைய பகுத்தறிவு தனக்கேயுரிய திருப்தியை நாடுகிறது. பகுத்தறிவும், சிந்தனையும் ஆட்சிக்கு வந்தன. இந்தியத் தத்துவ மேதைகள் பரம்பரைக்கு முதலிடம் கொடுத்தனர். தாங்கள் நாடும் சத்தியத்தை இருவழிகளாகப் பின்தொடர்ந்தனர். சுருதி முக்கியம். இது ஆரம்பக் காலத்து ஞானம். அதற்கு உள்ளுணர்வின் மலர்ச்சி எனப் பெயரிட்டனர். பகுத்தறிவைவிட அது உயர்ந்தது. இருந்தாலும் பகுத்தறிவிலிருந்து ஆரம்பித்து சோதனையை நடத்தினர். முடிவான தீர்ப்பை உறுதி செய்பவைகளை மட்டும் ஏற்றனர். தத்துவத்தை குறையான குற்றமாகக் கருதினர். தத்துவம் சொற்களின் மேகமண்டலச் சஞ்சாரம் செய்கிறது. சொல் கருத்தன்று, சப்தத்தின் பிரதிபலிப்பு.

பண்டிதர்கட்குச் சொற்கள் கூறுவது வேதவாக்கு. சொற்களை நாம் ஆராய வேண்டும். அவற்றிற்குப் பொருளுண்டு. பொருளைக் கொண்டு சொல்லையறிய முயலவேண்டும். பண்டிதர்கட்கு என்ன செய்ய வேண்டும் எனத் தெரியவில்லை. இரண்டில் எது உயர்ந்ததோ அதை ஒட்டிப் போகப் பிரியப்பட்டனர். பகுத்தறிவும், ஞானமும் ஆமோதிக்க வேண்டும் என விரும்பினர். இங்கு பகுத்தறிவு பணிய வேண்டும். அது இயல்பாக தலை நிமிர்ந்திருக்கும். நாளாவட்டத்தில் பகுத்தறிவின் உயர்வு வென்றது. அதனால் போட்டி எழுந்தது. அனைவரும் வேதத்தைப் பின்பற்றுவதாகக் கூறினர். வேதமும், அதன் சூத்தங்களும் போட்டிக்குக் கருவியாயின. ஞானம் முழுமையாகக் காண்கிறது. விவரங்களை முழுமையின் பகுதியாகக் காண்கிறது. முழுமை, ஒற்றுமை, ஞானத்தின் இணைப்பால் ஏற்படும் ஐக்கியம் ஆகியவை ஞானத்தின் போக்கு. பகுத்தறிவு ஆராய்கிறது. பிரித்து, சேர்த்து, பகுதிகளை இணைத்து முழுமையாகக் காண்கிறது. அப்படி ஏற்பட்ட முழுமையினுள் எதிரானவை, முரணானவை, அறிவுக்குப் பொருந்தாதவையுள்ளன. ஆரம்பக் காலத்து ஞானத்தில் ஐக்கியமிருந்தது. அறிவு அதைப் பல பகுதிகளாக உடைத்தது. தர்க்கவாதிகள் ஆயிரம் வழிகளைக் கண்டனர். அவர்கட்கு ஒத்துவாராததை மறைத்துவிட்டனர், தர்க்கத்தால் அழித்தனர். தத்துவம் தன் ஆட்சியை நடத்தியது.

ஆதிநாள் வேதாந்தக் கருத்துக்களில் முக்கியமானவை உயிர் பிழைத்தன. ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு பகுதியை ஏற்றனர். இவற்றையெல்லாம் சேர்க்கும் முயற்சிகள் அவ்வப்பொழுது நடந்தன. பரந்த எண்ணமும், இரண்டறக்கலக்கும் ஐக்கியமும் ஞானத் திற்குரியவை. அதை மீண்டும் மீண்டும் புதுப்பிக்க முயன்றனர். புருஷன், ஆத்மன், சத் பிரம்மம், சத் புருஷன் ஆகியவை அடிப்படையில் பிற்காலத்திலும் ஏற்கப்பட்டன. எல்லாக் கட்சிகட்கும் அவை பொதுவாக அமைந்தன. இவ் ஆன்மீகச் சத்தியங்களை, மனம் ஏற்கும் கருத்தாகவும், பக்தி ஏற்கும் உணர்ச்சியாகவும் மாற்றினர். சொற்களைக் கடந்த பிரம்மத்தின் முத்திரை எல்லாக் கருத்துகளிலும், எல்லாச் சொற்களிலும் தொனித்தன. இவற்றிலிருந்து எழுந்த பிரச்சினைகளே இந்தியத் தத்துவத்தை ஆட்கொண்டன. ஒன்று பிரகிருதி. அடுத்தது அகந்தை. பிரகிருதி ஆத்மாவின் பிரபஞ்சம். ஆத்மாவுக்கும், பிரகிருதிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதே கேள்வி. பிரகிருதியால் அகந்தை எழுந்தது என்றனர். அகந்தையே பிரகிருதியை உற்பத்தி செய்தது என்றனர் பிறர். எப்படியானாலும் அகந்தை ஆத்மாவை அடைவது எங்ஙனம் என்பது கேள்வி. ஆத்மா என்பது புருஷன், தெய்வம், சத்தியம் என நாம் பல வகைகளாகப் பேசுவதாகும்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேலை செய்ய உடலில் சக்தியைச் சேகரம் செய்ய வேண்டும் என்பதால் மனிதன் சோம்பேறியாகிறான்.

*சக்தியற்றவன் சோம்பேறி.*



# அன்பர் கடிதம்

இந்த ஒரு வருட காலமாகத்தான் எனக்கு அன்னையைப் பற்றித் தெரியும். அதற்கு முன்பு அவர்களைப் பற்றி அறியாமல் இருந்து இருக்கிறோமே என்று மிகவும் வேதனைப்படுகிறேன். நான் அன்னையை வணங்க ஆரம்பித்ததற்குப் பின் எனக்குக் கிடைத்த சந்தோஷம் எழுத்தில் எழுதித் தெரியப்படுத்த முடியாது. ஆனாலும் சில நிகழ்ச்சிகளை எழுதுகிறேன். வீட்டில் எந்தப் பொருள் காணாமல் போனாலும் அன்னையை வேண்டிக்கொண்டு தேடினால் உடனே கிடைத்துவிடுகிறது. எனக்குமட்டும் இல்லை, என்னைச் சார்ந்தவர்களுக்கும் நடக்கிறது. என் சிநேகிதியின் தங்கை வைர மோதிரம் தொலைத்துவிட்டாள் என்று என்னிடம் வந்து வருத்தப் பட்டாள். நான் அவளுக்காக அன்னையிடம் வேண்டிக்கொண்டேன். தொலைந்து 3 நாட்கள் ஆகியிருந்தது. அன்று இரவு அவர்கள் உறவினர் காரில் கிடைத்தது. அதே சிநேகிதி தன் மகன் சரியாகப் படிப்பது இல்லை, பரீட்சை சரியாக எழுதவில்லை என்று வருத்தப்பட்டாள். என் வீட்டிற்கு வந்து என்னிடம் உள்ள அன்னையின் படத்திற்கு முன் நின்று வேண்டிக்கொண்டாள். அவள் மகன் பாஸ் ஆகிவிட்டான். அவளால் நம்பவே முடியவில்லை. என் இரண்டாவது மகன் மார்க்கு குறைவாக வாங்கி வந்து கொண்டிருந்தான். பரீட்சையில் பாஸ் பண்ணவேண்டும் என்று அன்னையிடம் பிரார்த்தனைபண்ணி வந்தேன். அதன்படி பாஸ் ஆகிவிட்டான். என் கணவர் அடிக்கடி வெளியூர் ஆபீஸ் வேலையாகப் போய்வருவார். அந்த சமயத்தில் நான் தனியாக என் சிறிய மகனுடன் இருப்பேன். அவர் நல்லபடியாகப் போய் வரவேண்டும் என்றும், நான் எந்தக் கஷ்டமும் இல்லாமல் நல்லபடியாக இருக்கவேண்டும் என்றும் அன்னையை வேண்டிக்கொள்வேன். என் இரண்டு மகன்களும் நன்றாகப் படிக்கவேண்டும் என்பதும், அதிக மதிப்பெண்கள் எடுக்கவேண்டும் என்பதும்தான் நான் அன்னையிடம் நாள் தவறாமல் வேண்டிவருகிறேன். என் மகன்கள் படிப்பு விஷயத்தில்

அவ்வளவு ஆக இப்பொழுது நான் கவலைப் படுவது இல்லை. ஏன் என்றால் அன்னை பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கைதான். என் பெரிய மகன் இந்த வருடம் **(D.C.Te)** முடிக்கிறான். பிறகு அவனை **B.E.** சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்பது எங்கள் எல்லோருடைய விருப்பமும், அவனுக்கும் இதில் விருப்பம். அன்னையின் விருப்பமும் அதுவாக இருந்தால் அவனுக்கு நல்ல **college**ல் இடம் கிடைத்து அவன் நல்லபடியாகப் படித்து முடிக்க வேண்டும். மனிதப் பிறவியாகிய எனக்கு எவ்வளவோ பிரச்சினைகள், கவலைகள், கஷ்டங்கள் என்று இருந்தாலும் அவற்றையெல்லாம் தீர்க்க அன்னை இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது மன அமைதி கிடைக்கிறது. நாம் முழு நம்பிக்கையுடன் அன்னையை வழிபட்டால் நமக்கு வெற்றி நிச்சயம் உண்டு என்பது என் வாழ்க்கை அனுபவத்தில் கண்ட உண்மை.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சத், பிரம்மம், புருஷன், ஈஸ்வரனாகிறது. மனம் சத்தியத்தைப் பிரம்மமாகவும், தெய்வமனம் புருஷனாகவும், சத்திய ஜீவியம் ஈஸ்வரனாகவும் காண்கின்றது.

பிரம்மம், புருஷனாகி ஈஸ்வரனானால் மனம் தெய்வத்தைக் கடந்து சத்திய ஜீவியத்தை அடைகிறது.





# பென்ஜமின்

அன்னை ஆத்மா, ஆவி இவற்றைப் பற்றிப் பேசும்பொழுது நமக்குத் தேவையான பல செய்திகளைக் கூறுகிறார்.

பென்ஜமின் என்ற சாதகர் கிருத்துவர். அவர் காலமாவதற்குக் கொஞ்சநாள் முன் அவரது ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது. அவர் கிருத்துவரானாலும் அடக்கம் செய்வதற்குப் பதிலாக அவரது உறவினர் தகனம் செய்யும்படிக் கேட்டனர். அவர் உடல் தகனம் செய்யப்பட்ட பின் அவரது அறையிலுள்ள மேஜை, நாற்காலி முதலியவற்றை அப்புறப்படுத்திவிட்டனர். 12 நாள் கழித்து ‘அவர்’ நன்றாக உடையுடுத்தி, வழக்கம்போல் அன்னையை வந்து பார்த்து, ‘என் அறையிலிருந்து எல்லாச் சாமான்களையும் அப்புறப்படுத்திவிட்டனர். நான் என்ன செய்ய?’ எனக் கேட்டார். அன்னையைத் தரிசிக்க வரும்பொழுது மிகவும் நன்றாக உடை உடுத்தி வருவது அவர் வழக்கம். அதேபோல் இப்பொழுதும் வந்தார். ‘இனி உனக்கு மேஜை, நாற்காலிகள் தேவையில்லை’ என அன்னை பதில் கூறினார். இது சம்பந்தமாக அன்னை நமக்குத் தெளிவுபடுத்தும் கருத்துகள்:–

* ஆத்மா முன்னரே உடலைவிட்டுப் பிரிகிறது.
* தகனத்திற்கு முன் அன்னை (certain interval) இடைவெளி வேண்டும் என்றார்.
* அவர் ஆவி வெகுவாக உடலைவிட்டுப் பிரிந்திருந்தாலும், ஆவி எரியும் உடலைவிட்டுப் பிரியும்பொழுது (violent) சிரமமாக இருந்தது.
* மீண்டும் அந்த ஆவி ஓர் உருவமாக மாற 12 நாளாயிற்று.
* இறந்தபின் கரைந்த ஆவியை மீண்டும் ஒன்று சேர்க்க அன்னை முயன்றிருந்தால் சில மணி நேரத்தில் செய்திருப்பார். இவர்

விஷயத்தில் அதைச் செய்யவில்லை.

* மீண்டும் எழுந்த ஆவி தன்னுடைய அறைக்குப் போயிற்று.
* அறையில் பழையபடி வேலை செய்ய முயன்றது.
* அன்னையை வந்து தரிசனம் செய்தது.
* உயிரோடிருக்கும்பொழுது எப்படி அழகாகத் தலைவாரி, நன்றாக உடுத்து வருவாரோ, அதேபோல் ஆவியாக இருக்கும்பொழுதும் வந்தார்.
* அந்த ஆவி ஒரிரு வருஷங்களிருந்தது.
* உடல் வாழ்ந்த பழக்கத்தை ஆவி தொடர்ந்து வருவதால் அது நடக்கிறது.
* இவர் தம் பிறந்தநாளில் உயிர் பிரிந்தார்.
* தம்மிடம் வந்த ஆவியை அமைதிப்படுத்தி அவருடைய ஜீவனுடனிருக்கும்படி அன்னை அனுப்பினார்.
* ஆத்மா பிரிந்தபின் உயிர் பிரியும்வரை சிலசமயங்களில் அவர் ஸ்வாதீனமில்லாமல் காணப்பட்டார்.
* ஆத்மா, உயிர், ஆவி இவற்றிற்குள்ள வித்தியாசத்தை இந்நிகழ்ச்சி அறிய உதவுகிறது.

❋ ❋ ❋





**P.11 An absolute supernatural darkness falls**
**On man sometimes when he draws near to God**

## இறைவனை நெருங்கும்பொழுது பூரண இருள் சூழ்வதுண்டு

ஒளியின் அடியில் இருள் என்பதும், விடியலுக்கு முன் இருள் அடர்ந்திருக்கும் என்பதும் வழக்கு. இதற்குரிய தத்துவம் என்ன? ஒளி இருளாக மாறுகிறது என்றால் ஒளி சுருங்கி, இருள் அதிகமாகிறது எனப் பொருள். இரண்டு முக்கியமான கருத்துண்டு.

* அதிக இருள் என்பது அதிக ஒளி என்று பொருள்
* மாற்றம் க்ஷணத்தில் எழுவது

ஆன்மீக ஒளியின் முன் நடுப்பகல் நள்ளிரவு போன்றது என்கிறார் அன்னை. அத்துடன் ஆன்மீக இருளின் மீது நள்ளிருள் பிரகாசமாக இருக்கும் என்கிறார். சூரியன் தரும் ஒளி ஜடத்தின் ஒளி, அது ஒளியன்று எனவும் ஒளி என்பது ஜீவியத்தின் பிரகாசம், அது ஜடத்தில்பட்டு பிரதிபலிப்பதால் ஏற்படும் ஒளியை நாம் சூரிய ஒளி என்று காண்கிறோம் என்றும் பகவான் கூறும் தத்துவங்கள் நம் அறிவுக்கு எட்டாது. அவற்றை நாம் ஏற்க வேண்டுமானால் சில உதாரணங்கள் மூலமாக நாம் புரிந்துகொள்ள முயலலாம், நேரடியாகப் புரியாது.

* வெண்மை என்பது 7 நிறங்கள் கலந்தது.
* கருப்பு என்பது எல்லா நிறங்களையும் தன்னுட்கொண்டது.
* பணம் என்பது செக் அல்லது, நோட் அல்லது, வெள்ளி ரூபாயன்று, மனித உழைப்பு. மனித உழைப்பே பணம் எனப்படும்.
* படிப்பு என்பது பட்டமன்று, மனத்தின் அறியும் திறனே படிப்பு எனப்படும்.

* விஞ்ஞானிக்கும், ஆதிமனிதனுக்கும் அறிவு ஒன்றே - ஸ்ரீ அரவிந்தர்.

மேற்சொன்ன கருத்துகளில் பொதிந்துள்ள உண்மையை நாம் ஏற்பதுபோல் சாவித்ரியின் வரியில் மறைந்துள்ள கருத்தை நாம் அறிய முயலலாம். இந்தப் பக்கத்திலுள்ள மற்ற கருத்துகளின் பகுதிகள்,

* எண்ணத்தின் இரகஸ்யத்தினுள் மறைந்தாள்
* பல உருவகங்களில் மனம் திளைத்தது
* உயிர் பெற்றெழுந்த பின், முடிவைக் கண்டது
* நீர்க்குமிழி போன்றது, ஊனக் கண்ணிலிருந்து விலகியது
* ஆன்மாவின் ஜீவனற்ற நிழல் கண்ணுக்குப் புலப்படாது
* எதிர்காலத்தைத் தாங்கி வரும் பேய் போன்ற இதயம்
* விரைந்து மறையும் நிகழ்ச்சியின் சுவடு
* காலத்தின் ஓடை வேகமிழந்தது
* புரியாத புலனின் கரைகள்
* மறைந்துபோன மனித உருவங்கள்
* அழிந்தவற்றின் சூட்சும உருவங்கள்
* காலத்தைக் கணக்கிடும் சாட்சி
* கண்ட கனவும், நினைத்த நினைவும்
* நினைவெனும் வானில் பறந்தவை
* பல வண்ண உள்ளுறை உதயம்
* வாழ்வின் இராஜ பாதைகளும், அவற்றின் இனிய கிளை வழிகளும்

❋ ❋ ❋



**Agenda**

**Vol 3 - Page 213 Ramakrishna's experiences are in the vital**

## இராமகிருஷ்ணருடைய ஆன்மீக அனுபவங்கள் உணர்ச்சி பூர்வமானவை

பணம், பதவியை பெறும் வழிகள் பல. பணத்தைப் பெற்றவுடன், பேர் அளவில் பெற்றபின் உலகம் முழுவதும் அவருடன் தொடர்பு கொள்கிறது. ஆனால் உலகம் அவரை அறியும். வெளிநாடு சென்று பட்டம்பெற்று தொழில் நுணுக்கமறிந்து, இந்தியாவந்து தொழிலாரம்பித்துச் செல்வம் பெற்றவர் இன்ஜினீயர். **Stock exchange**இல், லாட்டரியில் அதிர்ஷ்டத்தால் பெருஞ் செல்வம் பெற்றவர் சிலர். படிப்பு வக்கீல் தொழிலைக் கொடுத்தது. சுப்ரீம் கோர்ட்டில் ஏராளமாகச் சம்பாதித்துச் செல்வரானவர் ஒருவர். அரிசி கடை, ரைஸ்மில் மூலம் படிப்பும், பண்புமில்லாதவன் கோடிக்கணக்காகச் சம்பாதித்துவிட்டான். கடத்தலில் சம்பாதித்தவன் அடுத்தவன் என்றால், நாம் தொழிலாலும், படிப்பாலும், வியாபாரத்தாலும், கடத்தலாலும் பணம் பெறலாம் என்றறிகிறோம்.

புத்தர் ஞானம் பெற்றவர். மனத்தின் அறிவால் ஞானோதயம் ஏற்படுகிறது. சங்கரர் பெற்ற ஞானமும் அப்படியே. ஆண்டாளும், மீராவும் பக்தியால் முக்தியடைந்தவர். ஹடயோகம் செய்பவர் உடலைத் தூய்மை செய்து மோட்சம் பெறுபவர். இராமகிருஷ்ணர் படிக்காதவர். ஞானமில்லை. ஆசனம், பிராணாயாமம் அவருக்கு முக்கியமில்லை. அவர் ஆழ்ந்த பக்திமான். *பணம் சம்பாதிக்க படிப்பு, தொழில், வியாபாரம் பயன்படுவது போல், மோட்சத்தை எந்த நிலையிலிருந்தும் - உடல், உணர்வு, மனம், ஆன்மா, சைத்தியபுருஷன் - அடையலாம்.* இராமகிருஷ்ணர் எல்லா யோகங்களையும் செய்தார்; இஸ்லாம், பௌத்தம், கிருத்துவம், ஹனுமான் பெற்ற சித்திகளைப் பெற அந்த முறைகளைக் கையாண்டார். ஹனுமான்போல் இராமன்மீது பக்தி செலுத்தியபொழுது தமக்கு வால் வளர்ந்ததாகவும் கூறுகிறார்.

பூரண யோகத்தை ஞானத்தால் மட்டுமோ, பக்தியால் மட்டுமோ, உணர்வால் மட்டுமோ, உடலால் மட்டுமோ செய்யமுடியாது. அனைத்தும் விழித்தெழுந்து ஆர்வத்துடன் யோகத்தை மேற்கொண்டால் மட்டுமே பூரணயோகத்தைச் செய்ய முடியும். பூரண யோகத்திற்குரிய அம்சங்கள்,

* சத் மூன்றாகப் பிரிந்து அவற்றில் ஒன்று பிரம்மம் எனப்படும். இதுவரை செய்த யோகங்கள் அனைத்தும் அந்தப் பிரம்மத்துடன் முடிவடைகின்றன, ஸ்ரீ அரவிந்தர் அதற்கடுத்த சத்புருஷனையும், அதற்கும் ஆதியான பிரம்மத்தையும் அடைந்து, அங்கிருந்து கீழேயிறங்கி சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம், மனம், வாழ்வு வழியாக அவர் அனுபவம் உடலைத் தீண்டியது. மோட்சத்தை நாடுபவர்கள் அவர்கள் ஆன்மா மட்டும் பலன் பெறுவதை நாடுபவர்கள். பூரணயோகம் மேலே போகும் பாதை இதுவரை யோகிகள் சென்ற பாதையன்று. அது ஓர் ஆத்மா உயர்ந்த பாதை. பலன் ஒருவருக்கு மட்டுமேயுண்டு. பூரணயோகம், மனிதகுலத்தின் பிரதிநிதியாக யோகத்தை மேற்கொள்கிறது. ஒரு தொழிலாளி தன் திறமையால் மந்திரியானால் அது அவனுக்குப் பலன் தரும். தொழிற்சங்கப் பிரதியாக மந்திரியானால், தொழிலாளவர்க்கம் முழுவதும் பலன் பெறும்.
* அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே முதன்முறையாக சத்புருஷனைக் கடந்த பிரம்மத்தையடைந்தவர்கள். 1947க்கு முன்னால் சி.பி. இராமசுவாமி, ஏ. இராமசுவாமி போன்றவர் மத்தியசர்க்கார் மந்திரிகளாக இருந்தனர். 1946இல் நேரு பிரதமரானார். அவை பிரிட்டிஷ் சர்க்காரில் வைஸ்ராயால் நியமிக்கப்பட்ட பதவிகள். 1950இல் இந்தியா ஜனநாயக நாடானபின் நேரு இந்தியாவின் சுதந்திரப்பிரதமர் என்பதுபோல் 1947க்கு முன் எந்த உயர்பதவியும் சுதந்திரத்திற்குரியதன்று. ஸ்ரீ அரவிந்தர் யோகம் தொடங்கி



சித்திபெறும் வரையில் சத்தியஜீவியத்தால் எவரும் யோகம் செய்யவில்லை என்பதால், ஆதியான பிரம்மத்தை அதுவரை எவரும் எட்ட வழியில்லை.

* பெண் தானே சம்பாதிக்குமுன் தகப்பனார், கணவன், மகன் ஆதரவிலிருந்தாள். எவ்வளவு பணமிருந்தாலும் அது அவளுடையதன்று. தானே சம்பாதிக்க ஆரம்பித்தபின், தனக்கே சொத்துரிமை வந்த பின்னரே பெண்ணின் பணம் அவளுக்கேயுரியது. அதுபோல் சத்தியஜீவியம் வரும்வரை மனம், உணர்வு, உடலுக்கு ஆத்மானுபவமில்லை. ஆத்மா பெற்ற அனுபவத்தை (பெண் கணவனின் சொத்தை அனுபவிப்பதுபோல்) மனமோ, உணர்வோ, உடலோ பெறுகிறது. சத்தியஜீவியத்தால் பெற்ற ஆத்மானுபவம் கீழிறங்கி வரும்பொழுது மனம் பெற்றால் அது மனத்திற்குரியது. உணர்வு பெற்றால் உணர்வுக்குரியது. உடல்பெற்றால் உடலுக்குரியது. அந்நிலை ஸ்ரீ அரவிந்தர் வருமுன் யோகிகட்கில்லை. இராமகிருஷ்ணர் பெற்றவை உணர்வால் பக்திமார்க்கம் பெறுவதுபோல் பெறப்பட்டவை என்கிறார் அன்னை.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கல்லூரிப் படிப்பு, மூட நம்பிக்கையை ஒழிக்கும். அறிவால் ஏற்பட்ட உணர்வை, பண்பை மாற்றும்பொழுது அழிக்கலாம். ஜீவியம் மாறி நோக்கம் மாறினால் திருவுருமாற்றம் ஏற்படும்.

கண்ணோட்டம் மாறினால் ஜடமும் திருவுருமாறும்.

*"அன்பர் உரை"*

# இந்தியா அமெரிக்காவாகச் சீக்கிரம் மாறலாம்

சென்னை - பெரம்பூர் ரிஷி இல்லத் தியான மையத்தில் 27.6.99 அன்று திருமதி ரேவதி சங்கரன் நிகழ்த்திய உரை

ஒருவர் ஒரு நாளில் பெற்றதை அடுத்தவர் பெற நெடுநாளாகும் என்பது உண்மை. ஓர் அரச குடும்பம் உற்பத்தியாகப் பல தலை முறைகளாகின்றன. நேரு இந்தியப் பிரதமரானார் எனில் அவர் தகப்பனார் மோதிலால் "இந்தியாவுக்கு சுதந்திரம் வந்தால் நான்தான் முதல் ஜனாதிபதி" என்று கூறிய செல்வர். சுமார் 10, 20 தலை முறைகளாக அது செல்வம் மிகுந்த குடும்பம். நேரு பெற்றதை சாஸ்திரியும், ராதாகிருஷ்ணனும், சஞ்ஜீவிரெட்டியும் பெற்றனர். நேரு செல்வப் பரம்பரையால் பெற்றதை மற்றவர் பாண்டித்தியத்தாலும், தியாகத்தாலும், நேர்மையாலும் பெற்றனர். நேரு முதல் பிரதமர். அவர் கட்டிய கோட்டையின் பலனைப் பிறர் அனுபவித்தனர்.

* காலம் மாறினால் முற்காலத்தில் நெடுநாளில் பெற்றதைப் பிற்காலத்தில் குறுகியகாலத்தில் பெறலாம்.
* பயிற்சி பலன் பெறும் காலத்தைப் பெரிய அளவில் சுருக்கும். நூறாண்டைப் பத்தாண்டாக்கும்.
* விளக்கம் பெறாத மறைந்துள்ள திறமை உயர்ந்ததானால், பலன் சீக்கிரம் வரும்.

சிங்கப்பூர், ஜப்பான், கொரியா, தாய்வான் போன்ற நாடுகள் 1950இல் இந்தியா போலிருந்து இன்று மேலை நாடுகள்போல் 50 ஆண்டுகளில் மாறின. அவர்கள் பெற்ற பலனுக்கு அவர்களுடைய உயர்ந்த கல்வி முறையே காரணம். நம் கல்வித் திட்டத்தை அது போல் உயர்த்த நாளாகாது. மேல் நாடுகள் விஞ்ஞான முன்னேற்றத்தால் உயர்ந்தன. நமக்கு அது இல்லை. ஆனால் பண்பு **(culture)**, ஆன்மீகம் உண்டு. பண்பும், ஆன்மீகமும், விஞ்ஞானத்தை



விட உயர்ந்தவை. விஞ்ஞானத்தை தன்னுட் கொண்டவை. ஆன்மீகமிருந்தால் அறிவு வளர்ச்சியை எளிதில் பெறலாம்.

* நம் நாட்டிலுள்ள ஆன்மீகத்திறனை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தினால்,
* பண்பின் உயர்வை உழைப்பால் வெளிப்படுத்தினால், நாம் அமெரிக்கா போலாகலாம்.

50 ஆண்டுகளில் கொரியா சாதித்ததை இந்தியா, 20 ஆண்டுகளில் சாதிக்கலாம். அதற்கு நாம் செய்யக் கூடியவை என்ன?

300 ஆண்டுகளில் ஐரோப்பா உயர்ந்து, உலகம் எனில் ஐரோப்பா என்று ஆயிற்று. அதைச் சாதித்தது அவர்கள் கல்வித்திட்டம், விஞ்ஞானம். ஐரோப்பாவில் அனைவரும் கல்வி பெற்றனர். விஞ்ஞானச் சாதனைகள் அனைத்தையும் அவர்களே கண்டுபிடித்தனர். நம்மைப்போல் 10 மடங்கு உழைக்கின்றனர். இந்தியர் உழைப்பதில்லை. இன்றும் கல்வி பெறாதவர் 40 சதவீதம். விஞ்ஞானம் நம் நாட்டில் வளரவில்லை. 300 ஆண்டுகளில் ஐரோப்பா சாதித்ததை அமெரிக்கர் 200 ஆண்டுகளில் சாதித்து அவர்களையும் கடந்தனர். அதற்குக் காரணம் ஐரோப்பியர் நாகரீகம் 1000 ஆண்டுகளாக வளர்ந்தது. 1000 ஆண்டுகளில் ஐரோப்பியர் உற்பத்திசெய்த நாகரீகத்தை அமெரிக்கர் 200 ஆண்டுகளில் உற்பத்தி செய்ய 5 மடங்கு அதிகமாக உழைத்தனர். நம்மைப்போல் அது 50 மடங்கு அதிக உழைப்பு. உழைப்பு என்பதுடன் விஞ்ஞானத்தை வளர்த்தனர். அவற்றையெல்லாம் ஜப்பான் தன் பண்பின் பலத்தால் 50 ஆண்டில் சாதித்துக் கடந்தது எனில் நம்மைப்போல் 50 மடங்கு உழைத்த (ஐரோப்பியர்) அமெரிக்கர்கள் 200 ஆண்டில் சாதித்ததை 50 ஆண்டில் ஜப்பான் சாதித்தது எனில் பண்புக்கு அவ்வளவு திறனுண்டு எனப் பொருள்.

* ஆன்மீகம் பண்பைவிட உயர்ந்தது.
* இந்தியப் பண்பு உயர்ந்தது எனப் பெயர் பெற்றது.

* பண்பும், ஆன்மீகமும் உடைய இந்தியா அமெரிக்கா, ஜப்பான்போல மாற முயன்றால் முடியும் என்பது உறுதி.
* ஜப்பான் 50 ஆண்டில் சாதித்ததை இந்தியா 20 ஆண்டிலும் சாதிக்கலாம்.
* அதைச் சாதிக்க அபரிமிதமாக இன்றுபோல் 50 மடங்கு உழைக்க வேண்டும்.
* நமது பண்பின் உயர்வையும், ஆன்மீகத்தின் சிறப்பையும் அறியவேண்டும்.
* அச்சிறப்பை உழைப்பில் வெளியிடவேண்டும்.

இன்று நம் நிலை என்ன?

* விவசாயப்பட்டதாரிகள் பயிரிடுவதில்லை. உத்தியோகத்திற்குப் போகிறார்கள்.
* இன்ஜினீயரிங் படித்தவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்வதால், தொழிலில் ஓரளவு முன்னேற்றம் வந்துள்ளது.
* விவசாயப்பட்டம் பெற்றவர் தம் படிப்பைப் பயிரிடுவதில் செலவு செய்தால் நிலஉற்பத்தி 10 மடங்கு பெருகும். அமெரிக்காவில் 4% மக்கள் நாட்டிற்கு உணவை உற்பத்தி செய்யும்பொழுது நம் நாட்டில் 70% மக்கள் உணவைத் தயார் செய்வதற்குக் காரணம் பெற்ற படிப்பைப் பயிரில் செலவிடாததுதான்.
* நம் ஆன்மீகப் பொக்கிஷம் எங்கே? நாடு ஆன்மீகத்தை மறந்து மதவழிபாட்டைப் போற்றுகிறது. 1900இல் ஜடம் என்பது சக்தி என விஞ்ஞானம் கண்டதைப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் ரிஷிகள் கண்டனர். ஜடம் என்பது சக்தி என்ற விஞ்ஞானத் தெளிவு அணுவைப் பிளந்தது. மேலையர் தாம் பெற்ற அறிவை வாழ்வில் வெளிப்படுத்தினர். இந்தியர் தாம் பெற்ற ஆன்மீக அறிவை வாழ்வில் வெளிப்படுத்த முயலவில்லை.



* மறைமுகமாக தானே அத்தெளிவு softwareஇல் வெளிப்படுவதால் உலகில் software capital என வழங்கும் அளவுக்கு இந்தியா பெயரெடுத்தது. Software கண்டுபிடிக்க இந்தியர் அறிவு பயன்படவில்லை. வேலை செய்து சம்பாதிக்கவே அத்துறை பயன்படுகிறது.
* உபநிஷதம், கீதை ஆகியவற்றை மேல் நாட்டார் போற்றியபின்னரே நம் நாட்டவர் ஏற்றுக் கொள்கின்றனர்.
* உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரமம் இந்தியாவில் அதுபோல் பிரசித்தி பெறவில்லை. அண்மையிலிருந்த தமிழ்நாடும் நெடுநாளாக அறியவில்லை. புதுவையே ஏற்கவில்லை.
* இந்தியர்கள் முதலாகத் தங்கள் ஆன்மிகம், பண்பு இவற்றின் உயர்வை அறிய வேண்டும். அவற்றின் திறனை வாழ்வு மிளிரப் பயன்படுத்த வேண்டும்.
* மேல் நாட்டவரின் விஞ்ஞான அறிவு வாழ்வில் கொடுத்த பலனைவிட நம் ஆன்மீகம் நமக்கு அதிகப் பலனைத் தரும். இது முடிவான பலனைத் தரவல்லது. ஆரம்பத்தில் என்ன செய்யலாம்?
* ஒரே நகரத்தில் அல்லது ஒரே மாவட்டத்தில் ஒவ்வொரு துறையிலும் ஒரு ஸ்தாபனத்தை எடுத்து அதன் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, இந்த குறுகிய வட்டத்துள் தங்கள் தங்கள் ஸ்தாபனங்களை மேல்நாட்டு ஸ்தாபனம்போல் தரத்தில் உயர்த்த முன்வந்தால், இக்குழு அகில இந்திய முன்னோடியாக இருக்கும்.
* இதற்குரிய அடிப்படை இந்தியாவிலுள்ளது. பஜாஜ் ஸ்கூட்டர் மேல் நாடுகட்கு ஏற்றுமதியாகிறது. டாட்டா நிறுவனம் நிர்வாகத்தில் மேலையருக்கு இணையாகவும், மிஞ்சியும் உள்ளது. ஏர்க்காடு பள்ளியின் தரம் அமெரிக்கருக்கு நிகரானது. இந்து பத்திரிகையை 30 ஆண்டுகட்குமுன் உலகத்தில் 6ஆம்

தரமாக கணித்தனர். ஆசிரம புத்தகங்கள் மேல் நாட்டு வெளியீடுகளை ஒத்தது. Software கம்பனிகள் அமெரிக்கக் கம்பனிகள் தோற்றப்பொலிவுடனுள்ளன. Titan கடிகாரம் தரம் உயர்ந்தது. அடிப்படை இருப்பதால் முயன்றால் முடியும். சென்னை நகரிலோ, தமிழ்நாடு முழுவதுமோ, ஒரே ஜில்லாவிலேயோ, வகைக்கு ஒரு ஸ்தாபனமென தானே முன்வருபவர்கள் ஓர் குழுவாகச் சேர்ந்து முடிந்த அளவு தரத்தை, நிர்வாகத்தை உயர்த்த முன்வந்தால், அக்குழு நாட்டு மனப்பான்மையை மாற்றவல்லது. முடியாது என இன்று கருதுவதை முடியும் என்று இச்சோதனை மாற்றும்; இது குறுகிய காலத்திலும் முடியும்.

* இக்குழுவின் உறுப்பினர்களாகச் சேர முன்வருபவர்கள் அவர்கள் ஸ்தாபனத்தின் தலைவர்களாகவோ, அல்லது ஒரு கிளையின் நிர்வாகியாகவோ இருப்பது அவசியம். சர்க்கார் ஸ்தாபனங்களும் சேர விரும்பினால் சேர்த்துக் கொள்ளலாம். எதுவும் கட்டாயமில்லை என்பதால், நஷ்டமில்லை.

* சுமார் 20 முதல் 100 வரை உறுப்பினர்கள் சேரலாம். அவர்கள் ஏற்கனவே தங்கள் துறையில் முதலிடம் பெற்றவர்களாக இருப்பது பொருத்தம்.

* அப்படிச் சேரக்கூடிய ஸ்தாபனங்கள் எவை?

1) குடும்பங்கள் - கிராமத்துக் குடும்பம் ஒன்று, நகரத்துக் குடும்பம், கூட்டுக் குடும்பம், சிறுநகரத்துக் குடும்பம், சிறு குடும்பம், பெண் வேலை செய்யும் குடும்பம் என வகைக்கு ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

2) கடைகள் - அளவைப்பொருத்து 3 நிலைகள் அல்லது வகையைப் (நகைக் கடை, மளிகைக்கடை என) பொருத்து சுமார் 10 வகைக் கடைகளைச் சேர்க்க வேண்டும்.

3) சிறு தொழில் - இங்கும் அளவு, தரம், துறை கருதி சுமார் 8,



அல்லது 10 தொழில்களைச் சேர்க்கலாம்.

4) நடுத்தரத் தொழில், கனரகத்தொழில், அந்நியர் பங்குகொண்ட தொழில்

5) பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், தொழிற்கல்லூரி, பாலி டெக்னிக்

6) ஆஸ்பத்திரி

7) ரோட்டரி கிளப்

8) கோர்ட்

9) போஸ்டாபீஸ்

10) பாங்க்

11) பண்ணை

12) ஆராய்ச்சி நிலையம்

13) நூலகம்

14) பஸ் ரூட்

15) ரயில்வே ஸ்டேஷன்

16) பஸ் ஸ்டாண்ட்

17) ஹோட்டல்

18) டிராவல் ஏஜென்சி

19) டூரிஸ்ட் சென்டர்

20) திருவிழா

21) திருமண விழா

22) தினசரிப்பத்திரிகை

23) லாரி சர்வீஸ்

24) தேயிலை, காப்பி எஸ்டேட்

25) சினிமா தியேட்டர்

26) நகைக்கடை

* தரம் உயர்த்தப்பட வேண்டிய வகைகள்:

1) முதற்படியாகப் பெறும் பலன் மேல் நாட்டுக்குச் சமமாக இருக்க வேண்டும். பள்ளியானால் அவர்கள்போல பாஸ் 100% இருக்க முயலவேண்டும். ஆஸ்பத்திரியானால் வியாதி குணமாக வேண்டும். பண்ணை எனில் மகசூல் உயரவேண்டும். நிர்வாகம், சேவை, திறமை எப்படியாயினும் result ஸ்தாபனம் தரும் பலன் மேல் நாட்டு நிறுவனம் போலிருக்கவேண்டும்.

2) Quality of product - பொருளின் தரம் நம் நிலையிலிருந்து அவர் நிலைக்கு உயர வேண்டும்.

3) Quality of Service

4) Punctuality

5) நாம் அவர்கள் 50 அல்லது 100 வருஷத்திற்குமுன் செய்ததைச் செய்கிறோம். Latest machine, latest method எனப் புதிய முறைகளில் அவர்கள் போலிருக்க வேண்டும்.

6) நம் நாட்டில் மனிதனைவிட பணத்திற்கு மரியாதையுண்டு. அவர்கள் நாட்டில் மனிதனுக்கு மரியாதையுண்டு.

7) சுத்தம் என்பதே நம் நாட்டிலில்லை.

8) சத்தம் என்பதே அந்நாடுகளில்லை. நாம் சத்தத்தில் வாழ்கிறோம் என்பதையே நாமறியோம்.

9) வாடிக்கைக்காரரை அங்குத் தெய்வமாகக் கருதுகிறார்கள்.

10) பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளில் உண்மையின் அளவு.

கொரியா, டைவான் போன்ற நாடுகள் டெக்னாலஜியை மட்டும் குறிப்பாகப் பின்பற்றின. நாம் நிர்வாகம், தரம், பண்பு, **life style**, நோக்கம் ஆகிய அனைத்தையும் இந்த நிறுவனங்களில் பின்பற்றினால் சில ஆண்டுகளில் மேல் நாட்டுத் தரத்தில் 50, 60% எட்டிப் பிடிக்கலாம். இம்மாற்றம் நாம் இன்று எதை அடைய முடியாது



என நினைக்கிறோமோ அதை அடையமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும். இது ஒரு **model** ஆக அமையும்.

நாடு முன்னேற மாடல் உதவும். ஆனால் இவ்வெண்ணம் நிறைவேற புதிய மனப்பான்மை எழவேண்டும். பிறர் உதவியை எதிர்பாராத சுய கௌரவம், நானும் மனிதன், என்னால் முடியாது என்று விட்டு விடுதல் எனக்குக் குறைவு, எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்பதை மாற்றி மரியாதையுடன், நாணயமாக, கௌரவமாக, சௌகரியமாக வாழ வேண்டும் என்ற தன்மான உணர்வு, உழைப்பு, சுறுசுறுப்பு ஆகியவை வேண்டும். அவற்றை ஏற்படுத்த பள்ளிகள், தலைவர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், குடும்பத் தலைவர்களால்தான் முடியும்.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசையை அடக்குவது நடத்தை. ஆசையைப் புரிந்து அழிப்பது பண்பு. மீறிடும் சக்தியை மனதால் அடக்குவது நடத்தை.

உணர்வின் பக்குவம் பண்பு. ஆசையின் ஆன்மாவை எழுப்பி திசையை மாற்றுவது திருவுருமாற்றம்.

நடத்தையும், பண்பும் திருவுருமாற்றத்தில் முடியும்.

## P. 7. An objective method of analysis or a subjective method of synthesis leads to unity

## விஞ்ஞான ஆராய்ச்சியாலும், நிஷ்டையாலும் பிரம்மத்தைக் காணமுடியும்

**இன்று ஜடம் என்பது சக்தி என விஞ்ஞானம் கண்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகட்கு முன் உபநிஷதம் சர்வமும் சக்தி எனக் கண்டது. விஞ்ஞானம் மேற்கொண்ட முறை ஆராய்ச்சி, உபநிஷதம் கைக்கொண்ட முறை நிஷ்டை - முடிவு ஒன்றேயாகும்.**

முனிவர் காட்டில் தவம் செய்து பெறும் பலனை, வீட்டில் பெண் கடமையை நிறைவேற்றிப் பெறமுடியும் என்பது நம் மரபு. ஒரே திறமையுள்ள பலர் பல தொழில்களை மேற்கொண்டாலும், முடிவில் பலன் என்று பார்க்கும்பொழுது, முறை வேறுபட்டாலும், பலன் ஒன்றாக இருக்கிறது. பலன் நம் திறமைக்கு வருவது. திறமை சமமானால் பலனும் சமமாக இருக்கும்.

கணவனுக்கும், மனைவிக்கும் ஒரே திறமையுள்ளது உண்மையானால், அவன் வேலை செய்து சம்பாதிப்பதும், மனைவி வீட்டை நிர்வாகம் செய்து பெறும் பலனும் சமமானவையே.

ஆராய்ச்சி மேலும் மேலும் பகுத்துணர்கிறது, **(infinitesimal)** அணுவைத் தேடி ஆராய்ச்சி செய்கிறது. நிஷ்டை உள்ளே போய் அனந்தனை **(infinity)** நாடுகிறது. தத்துவப்படி அணுவும், அனந்தனும் ஒன்றேயல்லவா?

**Life Divine** தத்துவம், **Savitri** காவியம். ஆனால் அவையிரண்டும் கூறுவது ஒன்றே. உரைநடையான தத்துவமும் காவியமான செய்யுளும் நமக்கு முடிவாக அளிப்பது ஸ்ரீ அரவிந்தம்.



ஸ்ரீ அரவிந்தர் பேசவேயில்லை. மிகக் குறைவு. **Silent God** என்று உடனிருந்தவர் கூறுகிறார். எவரையும் கண்டிப்பதில்லை. எதையும் வேண்டும் எனக் கேட்பதில்லை. வீடு அசுத்தமாகயிருக்கும். அவர் யோகத்திற்கு எந்த முறையும் தேவையில்லை என நிராகரித்து விட்டார். எவரையும் நம்பி எதையும் செய்யவில்லை. பணம் எங்கிருந்து வரும் எனத் தெரியாமல் புதுவைக்கு வந்துவிட்டார்.

அன்னை நாள் முழுவதும் பேசுவார். உடனிருப்பவர்கட்கெல்லாம் உத்தரவிட்டபடியிருப்பார். கேள்விகட்குப் பதிலளித்தபடியிருப்பார். எல்லோருக்கும் கட்டுப்பாடு விதித்தார். விதித்த கட்டுப்பாட்டை நிர்ணயமாகப் பின்பற்றும்படி வற்புறுத்துவார். தனக்குத் தேவையான பொருள்களைப் பல மாதம், சில சமயங்களில் ஒரு வருஷம் முன்னதாகத் தருவித்து வைத்துக்கொள்வார். தம்மைச் சுற்றி ஒரு பெரிய ஸ்தாபனத்தை உருவாக்குகியவர். சுத்தம் என்பதைத் தெய்வமாகக் கருதிப் பின்பற்றினார். ஸ்ரீ அரவிந்தரிடம் வரும்பொழுது பெரும் பணத்துடன் வந்தார்.

- *ஸ்ரீ அரவிந்தருடைய பாதையும், அன்னையின் பாதையும், வேறு வேறு நேர் எதிரானவை.*
- *ஆனால் அவை இரண்டும் அளிப்பது ஸ்ரீ அரவிந்தமே.*

❊ ❊ ❊

“*அன்னை இலக்கியம்*”

# கனவில் வந்த கண்கண்ட தெய்வம்

S. அன்னபூரணி

"His soul was freed and given to her alone" என்று பகவான் எழுதிய சாவித்ரியில் "The Adoration of the Divine Mother’’ என்ற முக்கியமான அத்தியாயத்தில் கடைசி வரியைப் படித்து முடித்து அன்னையை வணங்கிய ரகுநாதனை வாசல் “காலிங் பெல்” சத்தம் அழைத்தது. வழக்கம்போல் அந்தச் சத்தத்தையும் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டுக் கதவைத் திறந்த ரகுநாதனின் முகம் மகிழ்ச்சியால் விகசித்தது. “ஹாய் ஹரிதாஸ்! வா வா உன்னிடம் இருந்து கடிதமே வரவில்லையே, ஏப்ரல் தரிசன நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறதே, இதுவரையில் நாம் அதைத் தவற விட்டதேயில்லையே என்று நினைத்து அன்னையிடம் இப்பொழுதுதான் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். பிரார்த்தனை முடியவும் நீ வரவும் சரியாக இருக்கிறது.” "All sincere prayers are granted, every call is answered’’ என்ற அன்னையின் மந்திரம் மீண்டும் ஒரு முறை நிரூபணமாகிவிட்டது.

‘ரகு திடீரென்று வந்து இறங்கி உன்னை திகைப்பில் ஆழ்த்த வேண்டும் என்றுதான் கடிதம் போடவில்லை. முதலில் நான் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு அன்னையை நமஸ்கரித்து விட்டு, சாவித்ரியைப் படித்துவிட்டு வருகிறேன்.’

ஹரிதாஸ் பிரார்த்தித்து முடித்து வருவதற்கும் ரகுநாதன் ஆவி பறக்க காபி கலந்து எடுத்து வரவும் சரியாக இருந்தது.

‘ரகு உன்னுடைய இந்தக் காபிக்காக என் நாக்கு எவ்வளவு ஏங்குகிறது தெரியுமா? அண்ணி பார்வதி பத்து வருடம் முன்பு இறந்து போனதிலிருந்து நீயே ஒண்டிக்கட்டையாக உன் ஒரே பெண் சந்தியாவையும் வளர்த்து ஆளாக்கி திருமணமும் செய்து



கொடுத்துவிட்டாய். சமையலிலும் திறமைசாலியாக ஆகிவிட்டாய் உன் சமையல் பக்குவம் ஒரு பெண்ணுக்குக் கூட வராது. எப்படி உன்னால் முடிந்தது?’

‘சமையலில் “நளபாகம்” என்று கேள்விப்பட்டிருக்கிறாய். தமயந்தி பாகம்’ என்று கேள்விப்பட்டதுண்டா? கல்யாணம் போன்ற பெரிய விசேஷங்களில் கூட ஆண்கள்தான் சமைக்கிறார்கள். அது போகட்டும், தரிசன நாளுக்குப் போவதற்கு என்ன “பிளான்” வைத்திருக்கிறாய்?’ ‘நாம் என்ன பிளான் செய்வது? நாம் திட்டமிட்டால் நடந்து விடுமா? அம்மா மனசு வைத்தால் நாம் பாண்டி போக முடியும். வழக்கம்போல் சமர்ப்பணம்தான். இதுவரைக்கும் நாம் சமர்ப்பணம் செய்து ஏதாவது தரிசனநாள் தவறிப் போயிருக்கிறதா?’

‘ஹரி கொஞ்சநேரம் “Life Divine” படித்துவிட்டு அன்னையிடம் அமர்ந்து தியானம் பண்ணலாமா?’

தியானம் முடித்து மதிய உணவையும் முடித்துவிட்டு ரகுநாதன் தன் வெற்றிலைப் பெட்டியை எடுத்து வைத்தார். குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து ஒரு ‘பான் பீடா’ ஒன்றை எடுத்து ஹரிதாஸின் கையில் கொடுத்தார். ஹரிதாஸ் நெகிழ்ந்து போய் கண்களில் நீர் மல்க தன்னையறியாமல் ரகுநாதனைக் கட்டிக் கொண்டு விட்டார். ரகு, ரகு என்று நாத்தழுதழுக்கக் கூறிவிட்டு, ‘நீயல்லவோ உண்மை நண்பன்! குறிப்பறிந்து ஒவ்வொருவருக்கும் என்ன தேவை என்பதையறிந்து செய்வதில் உனக்கு நிகர் நீதான். நண்பன் என்றால் அவன் நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்னை கூறியிருக்கிறார். என்னை அப்படி ஏற்றுக்கொண்ட ஒரே நண்பன் நீதான். நான் தெரிந்தோ தெரியாமலோ இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டேன். என்னைச் சுற்றியிருப்பவர்களெல்லாம் இந்தப் பழக்கத்தை விட்டுவிடும்படி அட்வைஸ் செய்கிறார்கள். அவர்கள் சொல்வது என் நன்மைக்குத்தானென்றாலும் ஏற்கனவே குற்ற உணர்வில் பாதிக்கப்பட்டிருக்கும் என் மனம் அவர்கள் சொல்வதை

ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதமாக இந்தப் பழக்கத்தைத் தொடருகிறேன் என்கிறது. ஆனால் இப்பொழுது நீ எனக்காக இப்படி பானை வைத்து உபசரிக்கையில் ஒ இவனை நண்பனாக அடைய என்ன தவம் செய்தேன்? இதற்காகவே இந்தப் பழக்கத்தை விட்டுவிடலாமென்று தோன்றுகிறது. ரகு சில சமயங்களில் நான் உன்னையே அன்னையாகப் பார்க்கிறேன். தெய்வம் மனுஷ்ய ரூபேண என்று சொல்வார்கள். அந்த அன்னையைத் தரிசிக்க முடியாத குறை உன்னைப் பார்க்கையில் எனக்குத் தீர்ந்து விடுகிறது. இதுவரைக்கும் பெண்களிடம்தான் தாய்மை உணர்வைக் கண்டிருக்கிறேன். ஆனால் தாய்மையன்பு கொண்ட நான் சந்தித்த ஒரே ஆண் நீதான் ரகு', என்று உணர்ச்சி மேலிடக் கூறினார்.

இந்தப் புகழ்ச்சிகளினால் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத ரகு தனக்கேயுரிய பாணியில் தஞ்சாவூர்வாசிகளுக்கேயுரிய ஸ்டைலில் வெற்றிலையைக் கடைவாயில் லாவகமாக செருகிக் கொண்டே பேசினார்.

'எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது ஹரி. எல்லா ஆத்மாக்களும் மகிழ்ச்சியோடு இருக்கணும். எல்லோருக்கும் அன்பை வாரி வழங்கணும். இதில் என் சுயநலம் கூட இருக்கிறது தெரியுமா? ஓர் ஆத்மாவைத் திருப்தி செய்யும்போது அந்த மகிழ்ச்சியை என்னால் உணர முடிகிறது. அது என்னை மகிழ்விக்கிறது. The happiness you give makes you more happy than the happiness you receive என்று அம்மா சொல்லியிருக்காங்களே'.

'நான் என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறேன். குழந்தை சந்தியா எப்படி இருக்கிறாள்? அவளைக் கல்யாணத்தின்போது பார்த்தது. அவள் கணவர் சௌக்கியமா?'

'By Mother's Grace அவள் மிகவும் சந்தோஷமாயிருக்கிறாள். அவள் மாமியார் அவளைப் பெற்ற தாயைப்போல் நடத்துகிறார். அவள் கணவன் ராம்குமார் மிகவும் நல்ல பிள்ளை, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே, கூடிய விரைவில் நான் தாத்தாவாகப் போகிறேன்' என்றார் மகிழ்ச்சி பொங்கும் குரலில்.



'ஹையா' என்று ரகுநாதனே எதிர்பாராதவிதமாக அவரை ஒரு முறை மேலே தூக்கிக் கீழே இறக்கிவிட்டார்.

'ஏய் ஹரி என்ன இது சின்னக் குழந்தை மாதிரி?' 'நீ சொன்னது சாதாரணமான விஷயமா என்ன? எனக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. எப்ப டெலிவரி டைம்? scan எடுத்துப் பார்த்தாகி விட்டதா? பெண் என்றால் மீரா என்று பெயர் வைக்கணும், ஆண் என்றால் அரவிந் என்று பெயர் வைக்கணும். ரகு ஒரு விஷயம் நான் கவனித்தேன். நீ எல்லாவற்றிலும் பற்றற்ற ஒரு யோகியைப்போல் சமத்துவத்தைக் கடைப்பிடிக்கிறாய். ஆனால் நீ தாத்தாவாகப் போகும் விஷயத்தைச் சொல்லும்போது மட்டும் உன்னையறியாமல் அதீத மகிழ்ச்சியைக் காட்டிவிட்டது உன் முகம்'.

'நான் என்ன தெய்வப்பிறவியா? நானும் மனிதப் பிறவிதானே? நீதான் என்னை ஆண் வேடமணிந்த அம்மா என்று சொல்லி விட்டாய். எந்த அம்மாவிற்கும் தன் குழந்தையைப் பற்றிய விஷயத்தில் மகிழ்ச்சி ஏற்படுவது சகஜம்தானே? ஏன் ஆதி சங்கரர் கூட எல்லாப் பற்றினையும் அறுத்த போதும், தாய்ப்பாசம் என்ற பற்றை அவரால் விட முடியவில்லையே'.

'சரி, நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே, சந்தியா பெங்களூரிலிருந்து எப்பொழுது வருகிறாள்?' 'அதுதான் எனக்கும் சரியாகத் தெரியவில்லை' சொல்லி முடிக்கவும், 'சார் போஸ்ட்' என்று போஸ்ட்மேன் ஒரு கடிதத்தை வீசிவிட்டுப் போகவும் சரியாக இருந்தது. ஹரிதாஸ் ஓடிப் போய்க் கடிதத்தை எடுத்து வந்தார். அதில் எழுதியுள்ள விலாசத்தைப் பார்த்ததும், 'ஹாய் இது சந்தியாவின் கையெழுத்துப் போலல்லவா இருக்கிறது? அன்னையின் அருளைப் பார்த்தாயா? நான் கேட்ட கேள்விக்குப் பதிலளிப்பதுபோல் இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்.'

'நீதான் பிரித்துப் படியேன்' 'நானா?' 'ஏன் கூடாதா? நீ தோளில் தூக்கி வளர்த்த குழந்தையல்லவா சந்தியா? அவள் கடிதத்தைப் படிக்க உரிமையில்லையா?' என்றார் வாத்ஸல்யத்துடன். 'நானா' என்று

கேட்டதற்கு வெட்கப்பட்டுப்போய்க் கடிதத்தை உரத்த குரலில் படிக்க ஆரம்பித்தார்.

அன்புள்ள அப்பாவுக்கு,

சந்தியா அநேக நமஸ்காரங்கள். இங்கு நாங்கள் அனைவரும் சுகம். தாங்களும், தாங்கள் வழிபடும் அன்னையின் அருளால் சுகமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நான் நேற்று லேடி டாக்டரிடம் செக் அப்புக்குப் போயிருந்தேன். குழந்தை நல்லபடியாக வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் மே மாதம் இரண்டாவது வாரம் டெலிவரி ஆகிவிடும் என்றும் டாக்டர் கூறினார். எனக்கு மஞ்சள் காமாலை வந்திருக்கிறது. ஆகையால் நான் பலஹீனமாக இருப்பதால் முடிந்தவரை பெட் ரெஸ்டில் இருந்தால் நல்லது என்று டாக்டர் அபிப்பிராயப்படுகிறார். அதுதான் சிறிது கவலையைத் தருகிறது. மேலும் நம் வழக்கப்படி முதல் பிரசவத்திற்குப் பெண் தாய் வீட்டுக்குத்தான் வர வேண்டும் என்பதால் என் கணவர் நாளை என்னை அழைத்துக் கொண்டு சென்னை வருகிறார். என் புக்ககத்தினர் மிகவும் நல்லவர்கள். உன் வீட்டிலிருந்து யாராவது வந்துதான் அழைத்துப் போகவேண்டும் என்று சொல்லாமல் என் கணவரிடம் என் மாமியார் 'ராமு, பாவம் சந்தியா தாயில்லாத பெண், நீயே கொண்டு போய் சென்னையில் விட்டுவிட்டு வா' என்று சொல்லி விட்டார். எனவே நாங்கள் இரண்டு நாளில் கிளம்பி வருகிறோம். நீங்கள் ஸ்டேஷனுக்குக் கூட வரவேண்டாம். வந்த மறுநாளே என் கணவர் ஊர் திரும்பி விடுவார். ஹரி அங்கிள் கல்கத்தாவிலிருந்து எப்பொழுது வருகிறார்? அவரிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா? எனக்கு அவரைப் பார்க்க ஆவலாயிருக்கிறது. மற்ற விபரம் நேரில்.

கடிதம் படித்து முடித்தவுடன் நண்பர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'பாரேன் அன்னையின் மகிமையை! நான் சந்தியாவைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி முடித்த உடனேயே அவள் வருவதாகச் செய்தி வருகிறது. என்ன ஆச்சரியம்?' சட்டென்று ரகுநாதனின் முகத்தில் இருள் கப்பியது. 'ஹரி, கடிதம் வந்த மகிழ்ச்சியில் ஒரு விஷயத்தை மறந்தே போனேன்,



சந்தியாவுக்கு ஜான்டிஸ் என்று எழுதியிருக்கிறாள். அவள் நல்லபடியாகப் பெற்றுப் பிழைக்க வேண்டும். தவிர, நிறைமாதம் கொண்ட, உடல்நிலை சரியில்லாத, bed rest - இல் இருக்க வேண்டிய கர்ப்பிணிப் பெண்ணை வீட்டில் விட்டுவிட்டு நான் எப்படி தரிசன நாளுக்கு பாண்டி வரமுடியும்? தரிசன நாளை இதுவரை தவற விட்டதேயில்லை. அதே சமயம் தாயில்லாத பெண்ணைத் தனியாக விட்டுவிட்டுப் போனால் கடமையிலிருந்து தவறியவனாவேன் என்ன செய்வது?'

ஹரிதாஸுக்கும் அப்பொழுதுதான் உண்மை நிலை உரைத்தது. சிறிதுநேரம் அவரும் கவலைப்பட்டாலும் சட்டென்று சுதாரித்துக் கொண்டு, 'ரகு அன்னை இருக்கையில் ஏன் கவலைப்படுகிறாய்? இதில் அம்மாவின் முடிவுதான் முக்கியம். நாம் தரிசன நாளுக்குப் போவதா வேண்டாமா என்பதையும் அவரே முடிவெடுக்கட்டும், ஈஸ்வரன் தாயுமானவராக வந்து பிரசவம் பார்க்கவில்லையா? அதுமாதிரி அம்மாவே வந்து பிரசவம் பார்ப்பார், கவலைப்படாதே, அம்மா என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? மனிதன் வராத கஷ்டங்களையெல்லாம் வந்துவிடும் என்று நினைத்துக் கவலைப்படுகிறான். நாம் நிகழ்காலத்தில் வாழ வேண்டும். இப்பொழுது குழந்தை சந்தியாவை மகிழ்ச்சியோடு வரவேற்கத் தயார் செய்து கொள்ள வேண்டும், வா முதலில் கடைக்குப்போய் அவளுக்குப் பிடித்த பலகாரங்களை வாங்கிக் கொண்டு, அப்படியே நாளை சமையலுக்குத் தேவையான காய்கறிகளையெல்லாம் வாங்கி வரலாம். முக்கியமாக ஒரு நல்ல லேடி டாக்டரைப் பார்த்து அப்பாயின்ட்மென்ட் பெற்றுக் கொண்டு வரலாம்'.

'ஆமாம், நீ சொல்வதும் சரிதான். பார்வதி உயிரோடு இருந்திருந்தால் எந்த அளவுக்குக் குழந்தையை வரவேற்பாளோ, அந்த அளவுக்குக் குறையாமல் அவளை வரவேற்க வேண்டும்.'

மறுநாள் ஆட்டோ வாசலில் வந்து நின்றது. சந்தியாவைக் கைத்தாங்கலாகப் பிடித்துப் பரிவுடன் இறக்கிவிட்டான் அவள் கணவன் ராம்குமார். ஏற்கனவே அழகிய சிவந்த அவள் முகம்

தாய்மை பூரிப்பினால் இன்னும் மெருகு ஊட்டப்பட்டு மிளிர்ந்தது. ஆனாலும் முகத்தில் சிறிது களைப்பும், பாரத்தைச் சுமக்கும் சிரமமும் வெளிப்பட்டது. சிவந்த விரல்களில் மருதாணி; கைகளில் கலகலத்த கண்ணாடி வளையல்கள், அம்பாளின் பாதங்களைப் போல் சிவந்த பாதம். உள்ளே நுழையப் போனவளைத் தடுத்து நிறுத்தியபடி ‘அப்படியே நில்லு சந்தியா பக்கத்து வீட்டுப் பெண்ணை ஆரத்தி கரைத்து வரச்சொல்லியிருக்கிறேன். அப்பொழுதுதான் திருஷ்டி கழியும். வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா. மாப்பிள்ளை நகருங்கள். Luggage எல்லாம் நீங்கள் தொடக்கூடாது, நான்தான் எடுத்து வருவேன் என்று சொல்லி ஆட்டோவிற்குப் பணம் கொடுக்க பர்ஸைத் திறந்த ராம்குமாரை வலுக்கட்டாயமாகத் தடுத்து பர்ஸை அவரது சர்ட் பாக்கெட்டில் சொருகிவிட்டுத் தாமே ஆட்டோவிற்குப் பணத்தைக் கொடுத்து விட்டு வந்தார். சந்தியாவிற்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை.

‘ஹரி அங்கிள், என்ன இது என்னை இப்படி ஆனந்தக் கடலில் மூழ்க்கடிக்கச் செய்து விட்டீர்களே. வாசலில் மாக்கோலம், மாவிலைத்தோரணம், ஆரத்தியுடன் வரவேற்பு, உள்ளே அப்பாவின் சமையல் மணம் இங்கே வாசனை வீசுகிறது. உங்களைப் பார்த்த ஆனந்த அதிர்ச்சி’.

அவளுடைய உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை உள்ள ஒவ்வொரு அணுவும் பரவசப்படுவதை அவள் கண்ணில் பளிச்சிட்ட ஒளி வெளியிட்டது. மாப்பிள்ளை ராம்குமாருக்கும் ஏக மகிழ்ச்சி என்பது அவர் முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது, இப்படி ஒருவரால் அன்பை வெளிப்படுத்த முடியுமா? அன்று முழுக்க வீட்டில் ஒரே குதூகலம்தான், ஒருவரையொருவர் நன்கறிந்த நான்கு உள்ளங்கள் அன்பினால் பிணைக்கப்படும்பொழுது ஏற்படும் ஆனந்தத்திற்கு எல்லையேது? ரகுநாதன் விதம்விதமான மலர்களை வாங்கி வந்து சந்தியாவிடம் கொடுத்து, அம்மா! உன் கையால் மலர்களை அடுக்கி அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து நல்லபடியாக பிரசவம் ஆக வேண்டுமென்று வேண்டிக்கொள். உன் அம்மா பார்வதி இருந்தால்



கூட உன்னை அவ்வளவு நன்றாக கவனித்துக் கொள்ள முடியாது. இந்தத் தெய்வீக அன்னை அதைவிடப் பன் மடங்கு அதிகமாக உன்னைக் கவனித்துக் கொள்வார்! என்று கூறினார். உடனே சந்தியா அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள்.

மறுநாள் ராம்குமார் ஊருக்குக் கிளம்பும்போது ஹரிதாஸ் அவசர அவசரமாக சூட்கேஸைத் திறந்து தம் சார்பாகச் சந்தியாவுக்கு வாங்கி வைத்திருந்த புடவை, ரவிக்கையையும், மாப்பிள்ளைக்கு வாங்கியிருந்த வேஷ்டி, சர்ட்டையும் வைத்துக் கொடுத்துத் தன் அன்பை வெளிப்படுத்தியதில் மிகவும் நெகிழ்ந்து போயினர் சந்தியாவும் அவள் கணவரும்.

ராம்குமார் ஊருக்குப் போய் இரண்டு நாட்களாயின. தரிசனத் தினத்திற்கு இன்னும் நான்கு நாட்களே பாக்கியிருந்தன. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று புரியாமல் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டுப் பேச்சைத் தொடங்கினார் ரகுநாதன்.

‘குழந்தாய், நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன், எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை.’

‘ஏனப்பா தயங்குகிறீர்கள்? நான் என்ன வேற்று ஆளா? என்னிடம் சொல்லத் தயங்குவதுதான் எனக்கு வேதனையைத் தருகிறது’.

‘நான் தரிசன நாளுக்கு 24ஆம் தேதி பாண்டி போக வேண்டும். அதற்குத்தான் ஹரி அங்கிள் வந்திருக்கிறார். உன்னை எப்படித் தனியாகவிட்டுப் போவது என்று கவலையாக இருக்கிறது. ஆனால் நான் உன்னை விட்டுவிட்டுப் போய் விட்டேனே என்று நீ வேதனைப்படக்கூடாது, அம்மா இருந்திருந்தால் இப்படித் தனியே விட்டுப் போவாளா என்று நீ நினைத்துவிடக் கூடாது’.

‘அப்பா, இத்தனை நாட்களாக நீங்கள் என்னைப் புரிந்து கொண்டவிதம் இதுதானா? அம்மா இறந்ததும் கண்ணுக்குக்

கண்ணாக அம்மாவும், அப்பாவுமாக நீங்கள் என்ன வளர்க்க எத்தனைக் கஷ்டப்பட்டிருப்பீர்கள்? தாயில்லாத குறையே எனக்கு இதுவரை தெரிந்ததில்லை. நீங்கள் எனக்குக் கெடுதல் நினைப்பீர்களா? நீங்கள் போவதைப்பற்றி என்ன முடிவு எடுத்தாலும் எனக்குச் சம்மதமே, என்றாள் நிதானமாகத் தெளிவான குரலில்.

'அம்மா சந்தியா என் வளர்ப்பு வீண் போகவில்லை. மனதுக்கு எத்தனை இதமாகப் பேசுகிறாயம்மா? ஒரு 36 மணி நேரத்துக்குப் பொறுத்துக்கொள். பக்கத்து வீட்டுப் பெண்ணை உனக்குத் துணையாக வைத்துவிட்டுப் போகிறேன்'. 'சரியப்பா' அவளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துவிட்டு அமைதியான மனத்துடன் அன்னையின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுக் கிளம்பினர் நண்பர்கள் இருவரும்.

அற்புதமாகத் தரிசன நாளை முடித்துக் கொண்டு வீடு திரும்பியதும் அவர்கள் கண்ட காட்சி அவர்களை வியப்பிலாழ்த்தியது. சமையலறையிலிருந்து குக்கரின் விசில் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தால் சந்தியா கண்ணாடி வளையல் ஓசை கலகலக்க மிகுந்த தெம்புடன் முக்கால்வாசி சமையலை முடித்துவிட்டு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். என்ன இது நம்பவே முடியவில்லையே! போகும்போது ஓர் அடி எடுத்து வைக்கக்கூடச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தவள், மூச்சிறைக்க நடந்து கொண்டிருந்தவள், பெரும்பான்மையான நேரம் படுக்கையிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தவள், ஒரே நாளில் எப்படி இவ்வாறு மாறினாள்?

'என்னம்மா சந்தியா? ஒரு நாளில் எப்படி இவ்வளவு மாற்றம் வந்தது? போகும்போது இருந்த நிலை என்ன? இப்பொழுதுள்ள நிலை என்ன? என்னை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க்கடித்து விட்டாயே அம்மா, எப்படி நடந்தது இது?'

'சொல்கிறேன் அப்பா, ஹரி அங்கிள், நீங்கள் இருவரும் மிகவும் களைப்பாக இருப்பீர்கள். முதலில் இந்தக் காப்பியைக் குடித்துவிட்டு, குளித்துவிட்டு உங்கள் பூஜையை முடித்துவிட்டு வாருங்கள்.



அதற்குள் சமையலை முடித்துவிட்டு நானே என் கையால் உங்களுக்குப் பரிமாறப் போகிறேன். சாப்பிட்டவுடன் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டே பேசலாம்'. ஹரியும், ரகுவும் ஒருவரையொருவர் ஆனந்தமாகப் பார்த்துவிட்டு அவள் சொன்ன கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவள் சுவையுடன் சமைத்துப் பரிமாறிய உணவை உண்டுவிட்டு அவள் சொல்லப் போவதைக் கேட்கும் ஆவலில் அமர்ந்தனர். இன்னும் அவர்களுக்குத் தாம் காண்பது கனவா நனவா என்று புரியவில்லை. தங்களையே கிள்ளிப் பார்த்துக் கொண்டனர். சுவரில் சாய்ந்து கொண்டு கால்களை நீட்டிக்கொண்டு தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தாள் சந்தியா.

'அப்பா உங்களைப் பாண்டிக்குப் போகச் சொல்லிவிட்டேனே தவிர உள்ளூர எனக்கு பயம்தான். நீங்கள் வரும்வரை உயிரோடு இருப்பேனோ என்று சந்தேகப்பட்டேன். திடீரென்று என்னையறியாமல் அழ ஆரம்பித்துவிட்டேன். அழுதுகொண்டே என்னையறியாமல் தூங்கிவிட்டேன். அப்பொழுதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. கனவு என்றும் சொல்ல முடியாது. ஒரு அயல் நாட்டுப் பெண்மணியைப் பார்த்தேன். அவர் புடவை அணிந்திருந்தார். தலையைச் சுற்றி வட்டமாக **band** மாதிரி ஏதோ கட்டியிருந்தார். அவர் என்னருகே வந்து அமர்ந்து என் தலையை அதீத அன்புடன் வருடிக் கொடுத்தார். அப்புறம் தன் இனிய குரலில் என்னிடம் பேசினார்.

"குழந்தாய், கவலைப்படாதே கூடிய சீக்கிரம் நீ குணமாகி விடுவாய், உனக்குச் சுகப்பிரசவம் ஆகும்". எத்தனை நேரம் அவர் என்மேல் தன் அன்பை சொரிந்தார் என்று எனக்குத் தெரியாது. எப்பொழுது என்னை விட்டுப் போனார் என்றும் எனக்குத் தெரியாது. என்னையறியாமலேயே நீண்ட நாட்களுக்குப் பிறகு அமைதியான தூக்கத்தில் ஆழ்ந்து போனேன். மறுநாள் காலை எழுந்தவுடன் மிகவும் தெம்புடனிருந்தேன். எனக்கு நானே சிரமமில்லாமல் சமைத்துக்கொள்ள முடிந்தது. இப்பொழுது மிகவும் தெம்புடன் இருக்கிறேன்'.

ரகுநாதன் அவசர அவசரமாகத் தன் மேஜை இழுப்பறையைத் திறந்து அன்னையின் விதம்விதமான படங்களைக் காட்டி, 'அம்மா சந்தியா, நீ பார்த்த பெண்மணி இந்தப் படங்களில் இருப்பதுபோல் இருந்தாரா?'

அவற்றிலிருந்து அன்னையின் ஒரு குறிப்பிட்ட படத்தை எடுத்துக்காட்டி, 'இவங்களைத்தான் நான் பார்த்தேன், இவங்க யாரு?'

'இவர்கள்தான் என்னுடைய குரு, அன்னை. இவர்களுடைய தரிசனத்திற்காகத்தான் உன்னுடைய மோசமான நிலையிலும் உன்னை விட்டுப் போனேன். அவருடைய அருளால்தான் நீ குணமாகி இருக்கிறாய்?'

உடனே சந்தியா ஆர்வத்துடன், 'அப்பா எனக்கும் அவரின் படம் ஒன்று இருந்தால் கொடுங்களேன். நானும் இனி அவர்களை வணங்க ஆரம்பிக்கிறேன்'.

இது நடந்து இரண்டு மூன்று நாட்கள் கழித்து மாப்பிள்ளை ராம்குமார் திடீரென்று வந்து இறங்கினார்.

'என்ன மாப்பிள்ளை ஆச்சரியமாக இருக்கிறது?' 'மாமா, நான் தவறு செய்து விட்டேன். நான் இங்கு வந்து இறங்கியவுடன்தான் ஒரு விஷயம் என் மூளைக்கு எட்டியது. பெண்களே இல்லாத வீட்டில் நீங்கள் எப்படிப் பிரசவம் பார்க்க முடியும்? முதல் பிரசவம் பிறந்த வீட்டில்தான் பார்க்க வேண்டும் என்பது உண்மையென்றாலும், அந்த மரபைக் கட்டிக் காப்பதற்காக என் மனைவியைத் துன்புறுத்த விரும்பவில்லை. தாயில்லாத அவளுக்குத் தாயாக இருந்து என் அம்மாவே பிரசவம் பார்ப்பார். அவளை என்னுடன் தயவு செய்து அனுப்பி வையுங்களேன்'.

ரகுநாதன் இதையும் அன்னையின் அருளாக ஏற்றுக்கொண்டார். சாதாரணமாக மரபு வழக்கத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுக் கொடுக்காத சமூகத்தில் இது வழக்கத்திற்கு விரோதமாக இருக்கையில் அதை அன்னையின்



அருளன்றி வேறு என்ன சொல்ல? மகிழ்ச்சியுடன் சந்தியாவை அவள் கணவனுடன் அனுப்பி வைத்தார்.

அடுத்த வாரத்தில் அவருக்குத் தந்தி வந்தது. 'சந்தியா சுகப்பிரசவத்தில் ஓர் அழகான ஆரோக்யமான ஆண் குழந்தையை ஈன்றெடுத்திருக்கிறாள். தாயும் சேயும் நலம்' - ராம்குமார்.

தந்தி வாசகத்தைப் படித்து ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்த ரகுநாதன் அதை அன்னையின் பாதத்தில் வைத்து வணங்கி நன்றி செலுத்தும்விதமாக சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். நானிருக்க பயமேன்? என்று கேட்பதுபோல் அன்னை படத்திலிருந்து மோகனப் புன்னகை புரிந்தார்.

அன்னையின் மந்திரங்கள் என்ற புத்தகத்திலிருந்து கீழ்க்கண்ட வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்.

இறைவனின் அருளின் மேல் உள்ள நம்பிக்கையின் மூலம் எல்லா இடையூறுகளையும் எதிர்த்துச் சமாளிக்க முடியும்.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன் தத்துவம், பயிற்சி ஆகியவற்றைச் சொன்னபின் காவியமாக அவற்றை இலட்சியக் கருத்தாகவும் சொன்னார். சத்தியவாக்காக அவற்றை ஏற்று, இலட்சியவுணர்வாக அவற்றைக் கிரஹித்து, யோகப் பயிற்சியாக உள்ளத்தில் வைப்பது பூரண யோகமாகும்.

*தத்துவம் காவிய ரூபமாகச் சத்தியமாகிறது.*

# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - நம் பார்வை நமக்குத் தெரிந்தவற்றிலிருக்கும். நமது பாதை நமக்குத் தெரியாது. அன்னைக்குத் தெரியும். எனவே நாம் முன்னேறுவதற்கு நமக்குத் தெரிந்ததைச் செய்தால், அதே முன்னேற்றத்தை அன்னை நமக்கு நமக்குரிய பாதையில் தருவார்.

தம்பி - உதாரணம் உண்டா?

அண்ணன் - அன்னையின் செலவுக்குத் தேவையான தொகையை தாமே சம்பாதித்துத் தர ஒருவர் முன் வந்தார். அவர் முயற்சி நஷ்டமாயிற்று. ஆனால் அவர் எண்ணம் வேறு வகையில் பலித்தது. அவரைச்சார்ந்த ஒருவர் அவர் கொடுக்க முயன்ற தொகையைப்போல் 5 மடங்கு அன்னைக்குக் கொடுத்தார்.

தம்பி - என்ன அர்த்தம்?

அண்ணன் - இதை உதாரணத்தின்மூலமும் சொல்லலாம். பொதுவாகவும் சொல்லலாம். அவருடைய எண்ணம் முழுமையானதால், ஏதோ ஒரு வகையில் அது பலித்து விட்டது. எண்ணம் சரி. அவருக்கு உடனிருந்தவர் சேவை மனப்பான்மையில்லாதவர் என்பதால் அவர் முயற்சி தோற்றது. அத்துடன் அவர் அடிப்படை முயற்சி மனித சுபாவம் மாற வேண்டும் என்பது. அன்னையை 30 ஆண்டுகளாக அறிந்த தொழிலதிபர் கருமி என்பதால் அன்னைக்கு எந்தக் காணிக்கையையும் தருவதில்லை. இந்தக் கருமி மனம் மாறி பல லட்சம் காணிக்கை கொடுத்தது அவர் முயற்சியின் அடிப்படை வலுவானது எனக் காட்டுகிறது.



தம்பி - வேறு உதாரணமுண்டா?

அண்ணன் - அதை நீதான் சொல்ல வேண்டும். ஓர் அன்னைக் கருத்தை வெளியிட பல உலகப்பிரசித்தி பெற்றவர் களைக் கூட்டி மாநாட்டில் அதை வெளியிட சென்ற ஆண்டு முயன்றது உனக்குத் தெரியும். அங்கு அதை வெளியிட முடியவில்லை. மாநாட்டைக் கூட்டியவர் அதை முடித்துக்கொண்டு தம் தொழில் மாநாட்டுக்குப் போனார். தொழிலுக்கும் அன்னைக்கும் தொடர் பில்லை. இக் கருத்தை அங்குப் பேசினார். வந்திருந்த என்ஜீனீயர்கள் ஆரவாரமாக வரவேற்றார்கள். அடுத்த நாள் மற்றொரு பிரபலமான கூட்டத்திற்கு அவரை அழைத்திருந்தனர். நீண்ட பிரயாணம், ஓய்வில்லாமல் வேலை, நேரமில்லை என மறுத்தார். வற்புறுத்தி அழைத்தனர். "26 மணி விமானப் பிரயாணம், 1½ மணி time change, ஓய்வில்லை எனினும் வந்திருக்கிறார்" என இவரை அறிமுகப்படுத்தினார்கள். உற்சாகமாகப் பேசினார். அன்னைக்குரிய செய்தியை அங்குச் சொன்னார். ஒரே ஆரவாரம். பலத்த கைதட்டல். மாநாட்டுத் தலைவர் "இவர்கள் அனைவரும் பிரபலமானவர், எவர் பேச்சையும் கைதட்டி வரவேற்பவரில்லை இவர்கள்" என்று கூறினார்.

எந்தச் செய்திக்காக மாநாடு கூட்டினாரோ, அங்கு அதைச் சொல்ல முடியவில்லை. வரமாட்டேன் என்று மறுத்த இடத்தில் அன்னை செய்தி போகிறது. இவர் ஆர்வம் சரியானது. பார்வை மந்தம். எனவே அன்னை தம் போக்கில் தம் செய்தி பரவ வழி செய்கிறார்.

தம்பி - இதை நாம் பல இடங்களிலும் காண்கிறோம். உடல் நலம் குன்றியவரிடம் அன்னையைப்பற்றிப் பேசினால், அவர் வியாதியிருக்கட்டும், அன்னை என் பிரச்சினை

யைத் தீர்ப்பார்களா எனக் கேட்கிறார். மறுநாள் அவருக்குத் தொழிலில் பெரிய ஆர்டர் வருகிறது. நாம் அவர் வியாதியை முக்கியமாகக் கருதினோம். அவர் தம் பிரச்சினையை முக்கியமாகக் கருதுகிறார். அன்னை தொழிலை முக்கியமாகக் கருதுகிறார்.

ஒரு வக்ரமான முதலாளி. இவருக்கு ஒரு வக்ரமான மானேஜர். வெளிநாட்டார். இவர்களுக்குப் பாசம் என்பதே இருப்பதில்லை. எவரோடும் இந்த மானேஜர் பிரியமாகப் பேசிப் பழகாதவர். முதலாளிக்கு வக்ரமாகச் செய்தி அனுப்பினார். முதலாளி அன்னை முறையைப் பின்பற்றி, நான் கம்பனி விஷயத்தில் வக்ரமாக இருப்பதைப்போல் மானேஜர் என்னிடம் வக்ரமாக இருக்கிறார் என்று எடுத்துக்கொள்கிறேன் என்றார். அடுத்த நாள் மானேஜரிடமிருந்து **e-mail** வருகிறது. முடிவில் "please come soon. I miss you". **சீக்கிரம்** வாருங்கள். உங்களைப் பார்க்க ஆவலாக இருக்கிறேன் என்று கூறியது. முதலாளி அதைப் படித்துவிட்டு இந்த மனிதன் இச் சொற்களை வாழ்வில் மனைவியுள்பட இதுவரை எவரிடமும் சொல்லி யறியாதவர். இது அன்னையின் அதிசயம் என்றார். தொழிலுக்காக முதலாளி மனம் மாறினால் மானேஜர் குணம் அடிப்படையில் மாறுகிறது. இந்தியர்கட்கு ஞானம் உண்டு என அன்னை கூறுகிறார். அந்த ஞானத்தை நாம் புறக்கணிக்கிறோம்.

அண்ணன் – யூவான் சாங் என்ற சீனர் இந்தியாவுக்கு வந்தபொழுது இந்தியா தெய்வீகமான நாடு, எவருமே பொய் சொல்வதில்லை என எழுதியுள்ளார். இன்று நாடு மிகவும் மாறியுள்ளது. கேட்டுப்பெறுவது என்பதை மனிதன் கைவிட்டால், நாடு எப்படியிருக்கும்? மனிதன் அன்னையை எதுவும் கேட்கக் கூடாது என்று நினைப்பது எப்படிப்பட்ட நிலை?

தம்பி – இது உயர்ந்த நிலை என்பதில் ஐயமில்லை. சில உயர்ந்த ஆன்மாக்கள் இதைத் தவறாக எடுத்துக்கொண்டு அன்னையைக் கேட்டுப் பெறும் பாக்கியத்தை இழக்கின்றனர்.

அண்ணன் – இதுபோன்ற உண்மைகளைப் பெற்றோர் குழந்தைகட்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. சொல்லிக் கொடுத்தால் வாராது. குழந்தைகள் பெற்றோர் செய்வதையே செய்யும். மனப்பாடம் செய்வது தவறு எனில், செய்யுளையும் மனப்பாடம் செய்யக்கூடாது என்பதுபோல் தவறு ஏற்படுகிறது. 2000 வரி செய்யுளை மனப்பாடம் செய்வது இலக்கிய ரசனைக்கு அவசியம் என்று ரஸ்ஸல் என்ற மேதை கூறுகிறார்.

தம்பி – கேட்பது குறைவு.

கேட்பது உயர்வு,

என்ற இடங்கள் இரண்டும் உயர்ந்தவை என்பதை நடைமுறையில் அனைவரும் அறிவர். என்றாலும் இத்தவறு ஏற்படுகிறது. பொதுவாகக் கேட்பது குறைவு. நெருக்கமான இடத்தில் நெருக்கமானவற்றைக் கேட்டுப் பெற்றால் நெருக்கம் அதிகமாகும் என நாமறிவோம். அங்குக் கேட்காமலிருப்பது நெருக்கத்தைப் பறிக்கும். நண்பர்களை நாம் எப்பொழுது கூப்பிட வேண்டும், எதற்கு நாம் கூப்பிடாமல் அவர்களே வர வேண்டுமென்ற பாகுபாடு நமக்குண்டில்லையா?

அண்ணன் – எத்தனையோ சிறு விஷயங்கள், பெரிய உண்மைகள் அவற்றுள் புதைந்துள்ளன. அங்குச் சிறு மாற்ற மேற்பட்டால், பெரியது சிறியதாகிவிடும். பிரசாதம் வருவது நம் மனநிலையைப் பொருத்தது. ஆபீஸ் சுணக்கம் என அறிவது பிரசாதத்தை நம் மனத்திலி ருந்து பிரிப்பதாகும். இந்த உண்மைகளை எல்லாம்

அறிந்து பின்பற்றாமல் அன்னை வழிபாடு ஜீவனற்றுப் போகும். முறைகள் அவசியம், ஆனால் ஜீவனற்றவை.

தம்பி - **ஜீவனோடு அவசியமாகப் பின்பற்ற நமக்கு மனதில் ஜீவன் வேண்டும்.** ஜீவனற்றவர் தீவிரம்தான் நாம் காணமுடிவது. பொதுவாகத் தீவிரம் இருக்காது. இருந்தால் ஜீவனற்றவர்க்கே அதிருக்கும். அன்னைக்கு அடிப்படையே ஜீவனாயிற்றே. திருடுபோனால் எவ்வளவு நஷ்டம் என நினைக்கலாமா? நம் வீட்டில் சிறு துரும்பும் திருடு போகலாமா? திருடு போனால், அங்கு அன்னையிருப்பாரா? ஜெயிலுக்குப் போவதைப் போலன்றோ திருடு போவது? அன்னையை அறியும் மனிதன் மனிதப்பிறவியில் அற்புதமானவன். அறிமுகமானபின் அன்னையை ஜீவனோடு வழிபடுதல் என்பது எவ்வளவு பெரிய விஷயம்?

தொடரும்.

### இம்மாதத்தில் வரும் தரிசனநாள்

நவம்பர் 17 அன்னை மஹாசமாதி அடைந்த நாள்
24 பகவான் சித்தி பெற்ற நாள்

### அடுத்த மாதத்தில் வரும் தரிசனநாள்

டிசம்பர் 5 பகவான் மஹாசமாதி அடைந்த நாள்

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**
**Editor: Karmayogi**

# பிறர் வாழப் பொறுக்காதவன்

எந்தத் தொழிலிலும், எவ்வளவு திறமைசாலியானாலும், தொழிலில் நுழைவது சிரமம். அநேகமாக முடியாது. அற்புதமான பொருளை மார்க்கட்டுக்குக் கொண்டுவருவதால் மட்டும் அது விற்பதில்லை. மார்க்கட் பிடிப்பது என்பது அதிர்ஷ்டம்.

அமெரிக்காவில், நம் நாடுபோலவே, சேல்ஸ் ரெப்ரஸெண்ட்டேடிவ் உண்டு. அவர்கள் பல கம்பனி பொருட்களையும் விற்பார்கள். நம்மால் மார்க்கட்டில் விற்க முடியாத பொருளை அவர்கள் விற்பார்கள். மார்க்கட் பிடித்துவிட்டால், பொருள் தானே விற்கும். ரெப்ரஸெண்ட்டேடிவ் தேவையில்லை. ஆனால் மார்க்கட்டில் யார் பொருளை நுழைக்கின்றார்களோ, அவர்கட்கு, மார்க்கட் பிடித்தபின்னும், தொடர்ந்த கமிஷன் உண்டு. இதனால் உயர்ந்த பொருளைச் செய்பவர்கள் சொந்தமாக விற்க முனைகிறார்கள். எவரும் ரெப்ரஸெண்ட்டேடிவ்வுடன் வெற்றிகரமாகச் செயல்படுவதில்லை. ஒரு 400 கோடி கம்பனி விதிவிலக்காக ரெப்ரஸெண்ட்டேடிவ்வுடன் வெற்றிகரமாகச் செயல்பட்டது. அவரை நம் சொஸைட்டி அன்பர் என்ன ரகஸ்யம் எனக் கேட்டார். அவர் பதில்,

1) எவரும் ரெப்ரஸெண்ட்டேடிவ் தொடர்ந்து அபரிமிதமாகச் சம்பாதிப்பதைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை.

2) நாங்கள் மாறாகச் செயல்பட்டோம் என்றார்.

நாம் Coco colaவை அறிவோம். இன்று அது உலகப்பிரசித்தி பெற்றதாக இருப்பதற்கு ஒரு காரணம், "எங்கள் ஏஜெண்டுகள் கோடீஸ்வரர்களாக நாங்கள் முனைவோம்" என அவர்கள் செய்த முடிவாகும்.

- *பிறர் வாழப் பொறுக்காதவன் வாழ்வதில்லை.*
- *பிறரை வாழ வைக்க விரும்புபவன் கோடீஸ்வரனாகத் தவறுவதில்லை.*

அன்பர்கள் மாதம் இலட்சரூபாய் சம்பாதிக்க உதவ முன்வரும் அன்பர்களை நான் தேடுகிறேன். தானே அதைப்பெற எவரும் முன்வருவதில்லை. சிலர் முன்வந்தனர். அவர்கள் மனம், 'நான் மட்டும் முன்னேற வேண்டும்' என்றது. அதுவுமில்லாமல் போய்விட்டது. ஒருவர் விலக்கானார். தம் முயற்சியால் அடுத்தவர் பெரும் வருமானத்தை அவர் மனம் ஏற்றது. மேலும் வருமானம் வரும்பொழுது முதலில் வருவது பிறருக்கும், முடிவாக வருவது தமக்கும் என்ற கொள்கையை ஏற்றார். அவருக்கு அதிர்ஷ்டம் வந்தது. அவரால் பிறருக்கு அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்ய முடியும்.

***தான் அதிர்ஷ்டம்பெறுவது அன்னையை அறிவதாகும்.***

***பிறர் வாழ்வில் அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்வது அன்னையை ஏற்பதாகும்.***

# ஸ்டிரைக்

நியாயமான ஸ்டிரைக்குண்டு. அநியாயமான ஸ்டிரைக்கும் உண்டு. அந்த நாளில் அதிகாரியும், முதலாளியும் அதிகாரம் செய்தனர், அட்டகாசமும் செய்தனர். இன்று யூனியன் ஏற்பட்டுவிட்டதால் முதலாளி பாரபட்சமாக நடக்க முடிவதில்லை. சட்டத்தைப் புறக்கணிக்க முடிவதில்லை. ஆனால் யூனியன் எல்லாச் சமயங்களிலும் நேராக இருப்பதில்லை. அந்த நாளில் முதலாளி செய்த கொடுமையை இன்று தொழிலாளிகள் ஏதோவொரு சமயம் செய்யவும் யூனியன் உடந்தையாக இருக்கிறது. **Negotiations** பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் நாகரீகம் நிலையாக எழும்வரை நியாயம் அநியாயக் கலப்புடனே வரும்.

டெலிபோன் ஜெனரல் மேனேஜர். தமக்கு வசதியாக டிரான்ஸ்பர் வர பிரியப்பட்டார். ஆனால் சட்டப்படி டிரான்ஸ்பர் கேட்க இன்னும் 2 வருஷமுண்டு. இவர் பக்தர். சட்டத்தை மீறிப் போக மனம் இடம் தரவில்லை. திடீரென இவர் விரும்பும் ஊரில் இவருடைய சேவை தேவைப்பட்டு சர்க்காரே டிரான்ஸ்பர் கொடுத்தது. யூனியன் ஆட்சேபித்தது. கொஞ்சநாள் கழித்து வேறொரு ஆபீசருக்கு 3 வருஷ சர்வீஸ் முடியுமுன் டிரான்ஸ்பர் வேண்டுமென யூனியன் கேட்டதைச் சர்க்கார் மறுத்தது. யூனியன் ஆட்சேபித்து ஸ்டிரைக் செய்தது. யூனியன் தலைவர் அன்பர் பெயரை banner இல் எழுதி யூனியன் ஆட்சேபணையைத் தெரிவித்தார்.

- தம்மால் ஆபீசுக்கு ஸ்டிரைக் வந்தது கண்டு அன்பர் மனம் பொறுக்கவில்லை.
- தீவிரமான பிரார்த்தனையை மேற்கொண்டு தம் பங்குக்கு உண்டான மனமாற்றத்தைச் செய்ய முயன்றார்.
- 1/2 மணி கழித்து ஸ்டிரைக் நடக்கும் ஊரிலிருந்து ஸ்டிரைக் வாபஸ் செய்யப்பட்டதாகச் செய்தி வந்தது.
- பிறகு யூனியன் தலைவர் அன்பரைச் சந்தித்து தம் செயலுக்கு வருத்தம் தெரிவித்தார்!